# THE VIVEKA CHINTAMANI

## A Monthly Tamil Magazine and High Thought Review.

Devoted to the Diffusion of Practical Truth and Knowledge

**Dealing with the Principles of Education, Psychology, Soul-culture, and Ethics.**
**Adapted for Use in Homes and Schools.**

---

**God is Love: Knowledge is power: AUM.**

**"Love and Learn"**—"ஓதுவதொழியேல்."

SATYAMEVA JAYATE.

**Vol. XX.**

*(For the Tamil Year Paritapi.)*

## *April 1912-March 1913.*

# வி வே க சி ந் தா ம ணி.

*அறிவைப் பரவச்செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.*

---

அறிவுடையாரெல்லாமுடையார்; அறிவிலா
ரென்னுடையரேனுமிலர். — திருக்குறள்.
கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக. — திருக்குறள்.

**20-ம் புத்தகம்.**

(பரீதாபிஞு.)

1912-ஞு எப்ரல்மீ முதல் 1913-ஞு மார்ச்சுமீ வரை.

---

PUBLISHED BY
**THE SECRETARY DIFFUSION OF KNOWLEDGE AGENCY;**
**For The Lalita Publishing Co., (Sole Agents and Managers,)**
**Lalitalaya, 19, Adam St, Mylapore, Madras, S.**

1912-1913.

**Bound Vol. Rs. 5.]** [Unbound Vol. Rs. 4.

*All Rights Registered.*

The Copyright of every article first published in this volume is vested solely in the Editor and Registered in his name.

# TABLE OF CONTENTS.

## Vol XX (April 1912-March 1913)

### No. 1. For APRIL 1912.


| | | PAGE. |
|---|---|---|
| 1. | Hearty Greetings and Best Wishes for a Happy and Prosperous New Year | 2 |
| 2. | "Hamlet Redivivius"—A By-Play | 5 |
| 3. | The Passing of the Jagadguru Sri Sankaracharya Swamigal of Sringeri | 7 |
| 4. | Sister Nivedita | 9 |
| 5. | The Depressed Classes Mission | 10 |
| 6. | The Tamil: Its Origin and Growth | 14 |
| 7. | On the Use and Abuse of Power and Pelf | 17 |
| 8. | The Late Dewan Bahadur R. Ragunatha Row, C. S. I. | 18 |
| 9. | Rice Milling Industry in South India | 20 |
| 10. | Welcome Address by Rao Bahadur V. K. Ramanujachariar | 22 |
| 11. | Herbs with Rare Qualities | 28 |
| 12. | Extracts:—Wages in the Palace | 30 |
| 13. | Green Leaf Manure and Green Manuring | 31 |


### 1912-ம் ௵ ஏப்ரல் ௴, 1-வது சஞ்சிகை.


| | | |
|---|---|---|
| 1. | புதுவருஷப் பிரளயம் | 2 |
| 2. | ஹேமலதானந்த விக்ரஹம் | 5 |
| 3. | ஸ்ரீஜகத்குரு சங்கராசாரியஸ்வாமிகள் ஐக்கியம் | 7 |
| 4. | நிவேதிதையம்மன் | 9 |
| 5. | "தாழ்ந்தகுலம்வாழத் தாழாதுழைக்கும் குழாம்" | 10 |
| 6. | தமிழ்மொழி யோகக்ஷேமம் | 14 |
| 7. | தங்கச்செருப்பு தலைமேலே பதமிட்ட செருப்பு பாதத்திலே | 17 |
| 8. | திவான்பகதூர் ஆர். இரகுநாதராவ் காலகதியானார் | 18 |
| 9. | தென்னிந்தியாவில் நெல்லுக்குத்துந் தொழில் | 20 |
| 10. | சென்னை மகாணக் கான்பரென்ஸ் வரவேற்புப் பிரசங்கம் | 22 |
| 11. | அபூர்வ சக்திவாய்ந்த மூலிகைகள் | 28 |
| 12. | அரண்மனைச் சம்பளம் | 30 |
| 13. | பச்சிலைஎருவும் பசுந்தாள் பயிரும்—கிருஷிகன் | 31 |


### No. 2. For MAY 1912.


| | | |
|---|---|---|
| 1. | Religion Essential to Worldly Progress | 34 |
| 2. | Religion Essential to Moral Progress | 37 |
| 3. | Religion Essential to Material Progress | 39 |
| 4. | Sri Sankara—A Sketch (T. C. Venkataramana Iyer) | 41 |
| 5. | Selection: To Lord Ranganatha—Shiyali Arunachala Kavirayar | 45 |
| 6. | Easy Lessons in Economics—(T. C. V. Iyer) | 46 |
| 7. | "The Indian Pepys" | 48 |
| 8. | Hamlet Redivivius—A By-Play Act I. Part 2 | 51 |
| 9. | Notes and Extracts: The High Standard of Justice among Kings of India | 54 |
| 10. | Maldive Islands | 56 |
| 11. | Tigar Hunt—A Moral Tale | 57 |

| | | PAGE. |
|---|---|---|
| 12. | The Law of Life alone Conquers | 61 |
| 13. | Co-operative Banks in India | 62 |
| 14. | Chitrapoornami-V. C. | 64 |


## 1912-ம் வருஷம் மேமாதம், 2-வது சஞ்சிகை.


| | | |
|---|---|---|
| 1. | உள்மதமின்றி உலகக்ஷேமமில்லை | 34 |
| 2. | நன்மதமின்றிச் சன்மார்க்கமில்லை | 37 |
| 3. | நிவிருத்தியின்றிப் பிரவிருத்தியில்லை | 39 |
| 4. | ஸ்ரீ சங்கரர்-டி. வி. வெங்கட்ரமணய்யர் | 41 |
| 5. | ஸ்ரீ ரங்கநாதரே ! என்பள்ளிகொண்டீர் ! | 45 |
| 6. | குடிவாழ்க்கை—டி. வி. வெங்கட்ரமணய்யர் | 46 |
| 7. | ஆனந்த ரங்கபிள்ளை அந்தரங்க தினசரிக்குறிப்பு | 48 |
| 8. | ஹேமலதாநந்த விக்ரஹம் அங்கம் 1, பங்கம் 2 | 51 |
| 9. | இந்துதேச பூர்வீக அரசர்களும் அவர்களுடைய நீதியும் | 54 |
| 10. | மலையத்திவு | 56 |
| 11. | புலிவேட்டை—ஒரு நீதிக்கதை | 57 |
| 12. | தர்மமே தலைகாக்கும் | 61 |
| 13. | இந்தியாவில் நாணய பாங்கிகள் | 62 |
| 14. | சித்ராபூர்ணமி-விவேகசிந்தாமணி | 64 |


## No. 3. For JUNE 1912.


| | | |
|---|---|---|
| 1. | IV. Self-Government Essential to National Progress | 66 |
| 2. | V. The Sacred Task of Nation-Building | 69 |
| 3. | "The Indian Pepys"—II | 71 |
| 4. | Hamlet Redivivius—A By-Play—Act I. Part 3 | 74 |
| 5. | Longevity | 77 |
| 6. | The Lost Child—A short story | 80 |
| 7. | The Prodigal Put Out | 82 |
| 8. | Fate *versus* Free Will—A Novel Adventure | 85 |
| 9. | The Law of Life alone Conquers | 90 |
| 10. | "Love's Labour Lost' (A New Version)—By L. Anantaiyar | 95 |
| 11. | Notes & Extracts. The Indian Fibre Industry | 96 |
| 12. | The Cultivation of Mango | 96 |


## 1912-ம் வருஷம் ஜூன்மாதம், 3-வது சஞ்சிகை


| | | |
|---|---|---|
| 1. | தன்னைத் தானுவ தரணியெல்லாம் ஆளலாமே | 66 |
| 2. | சமஷ்டித்தேர்த் திருப்பணி | 69 |
| 3. | ஆனந்த ரங்கப்பிள்ளை தினசரிக்குறிப்பு | 71 |
| 4. | ஹேமலதாநந்த விக்ரஹம்—அங்கம் 1. பங்கம் 3. | 74 |
| 5. | தீர்க்காயுஸ் | 71 |
| 6. | காணாமற்போன குழந்தை | 80 |
| 7. | தத்தாரிப் பிள்ளைகளைத் தவிர்க்கும் வழி | 82 |
| 8. | விதியை மதியால் வெல்லக் கூடுமோ ? | 85 |
| 9. | தருமமே தலைகாக்கும் | 90 |
| 10. | 'அன்புக்குமுண்டோ அடைக்குந்தாழ்' ல. அனந்தய்யர் | 95 |
| 11. | இந்தியா நார்த் தொழில் | 96 |
| 12. | மாந் தோப்புகள். | 96 |

## No. 4. For JULY 1912.


| | | PAGE. |
|---|---|---|
| 1. | The Ultimate End or the *Summum Bonum* of Human Existence | 98 |
| 2. | Eternity—The Origin of Vedas and Agamas | 101 |
| 3. | Hamlet Redivivius—A By-Play Act 1 Part 4 | 102 |
| 4. | The Curse of the Country | 106 |
| 5. | Sri Sankara—A Sketch—II | 108 |
| 6. | The Indian Pepys—III | 112 |
| 7. | India's Strong Man | 115 |
| 8. | The Lost Child—II Short Story | 117 |
| 9. | A Wife is Half the Man, His truest Friend | 121 |
| 10. | A Wonderful Bed | 122 |
| 11. | Benefits of the Co-operative Societies | 127 |


## 1912-ம்௵ ஜூலை௴, 4-வது சஞ்சிகை.


| | | |
|---|---|---|
| 1. | சுகிர்தலாபம்—ஜந்மசாபல்யம் | 98 |
| 2. | வேத சிவாகமங்களின் உற்பத்தி | 101 |
| 3. | ஹேமலதாநந்த விக்ரஹம் அங்கம் 1. பங்கம் 4. | 102 |
| 4. | இந்தியாவின் சாபம் | 106 |
| 5. | ஸ்ரீ சங்கரர்—II | 108 |
| 6. | ஆநந்த ரங்கபிள்ளை தினசரிக்குறிப்பு—III | 112 |
| 7. | இராமமூர்த்தி நாயுடு | 115 |
| 8. | காணமற்போன குழந்தை—II சிறுகதை | 117 |
| 9. | "சதியென்பாள் அர்த்தநாரீ—பதியிலவளொருபாதி" | 121 |
| 10. | அற்புதமான ஒரு கட்டில் | 122 |
| 11. | ஐக்கியநாணயச் சங்கங்களால் உண்டாகும் நன்மைகள் | 127 |


## No. 5. For AUGUST 1912.


| | | |
|---|---|---|
| 1. | Be Still and Know that I am God | 130 |
| 2. | Easy Lessons in Economics—XI | 132 |
| 3. | Sri Sankara, A Sketch—III | 134 |
| 4. | Lo! What wonder this! The Working of the Lord! | 140 |
| 5. | Our Theism is the Purification of the Human Mind | 142 |
| 6. | Historical Selections: The Romance of a Vanquished King | 144 |
| 7. | Sketches from Life—Mahar Mallari | 149 |
| 8. | On Physical Culture | 153 |
| 9. | Dahara Vidhya Stutih or The Soul's Awakening | 155 |
| 10. | The Law of Life alone Conquers | 156 |
| 11. | "*Honi-Soit-Qui-Mal-y-Pense,*" | 156 |
| 12. | A Branded Daughter-in-Law | 159 |


## 1912-௵ ஆக்ஸ்டு௴, 5-வது சஞ்சிகை


| | | |
|---|---|---|
| 1. | மோனசாதனம் | 130 |
| 2. | குடிவாழ்க்கை—பாடம் II | 132 |
| 3. | ஸ்ரீ சங்கரர்—III | 134 |
| 4. | "ஐயன்செய்யும் கூத்தென்னவோ இது அதிர்சயங்காண்" | 140 |
| 5. | ஸத்ஸங்கமும் அதனால்வரும் நிர்மலசித்தமும் | 142 |
| 6. | சரித்திர விலாசம் ஒரு மோஹலாயராஜன் கதை | 144 |
| 7. | மாஹர் மல்லாரி | 149 |

PAGE.

8. தேஹப் பயிர்ச்சி ... ... 153
9. திருச்சிற்றம்பலம்; ஆத்மோத்தாரணம், ... ... 155
10. தருமமே தலைகாக்கும் ... ... 156
11. "கெடுவான் கேடுநினைப்பான்" ... ... 156
12. குடிடப்பட்ட மருகி ... ... 159

## No. 6. For SEPTEMBER 1912.

1. Joy Immanent and Transcendant ... ... 162
2. Indian Folk Songs of Truth and Wisdom... ... 165
3. "The Kingdom of the World is become the Kingdom of God and His Son" ... ... 167
4. Wealth Supreme ... ... 170
5. The Lord of Pazhani's Grace Assured ... ... 175
6. "Hamlet Redivvius"—A By-Play ... ... 179
7. "*Honi-Soit-Qui-Mal-y-Pense*" ... ... 182
8. The Law of Life alone Conquers ... ... 185
9. Sri Krishna's Birthday ... ... 188
10. Transfusion of Thought ... ... 190
11. The Lord's Birthday-Experience ... ... 191
12. The Emperor of Japan ... ... 192

## 1912-ம் ௵ செப்டம்பர் ௴, 6-வது சஞ்சிகை.

1. இன்பம், "களவியல்," "கற்பியல்" ... ... 162
2. "கலியுகவரதா! காத்தருள் வேலா!" ... ... 165
3. "ஒருமுருகா, வருமுருகா, தருமுருகா, திருமுருகா!" ... ... 167
4. பரமைசுவரியப் பிரஸாதம் ... ... 170
5. "பழநியாண்டவர் கிருபைசெய்வர்" ... ... 175
6. ஹேமலதாகாந்த விக்ரஹம் ... ... 179
7. கெடுவான் கேடுநினைப்பான் ... ... 182
8. தருமமே தலைகாக்கும் ... ... 185
9. ஜன்மாஷ்டமி ... ... 188
10. வாதவித்தை—பாவனுமாற்றம் ... ... 190
11. ஜன்மாஷ்டமி யநுபவம் ... ... 191
12. ஜப்பான் சக்ரவர்த்தி ... ... 192

## No. 7. For OCTOBER 1912.

1. The Undedicated Life and the Undiciplined Mind lead one to Evil ... ... 194
2. Sri Sankara, A sketch—IV ... ... 197
3. The Orphan's Cry: The plaintive Voice that enters the Great Mother-Heart of the Universe ... ... 202
4. Allan Octavius Hume ... ... 204
5. "In the Kingdom of God Within." "The Origin of Life" ... ... 206
6. Wisdom is All-Powerful ... ... 210
7. Patience and Envy ... ... 213
8. The Constitution of Man ... ... 217
9. Easy Lessons in Economics—(T. C. V. Iyer) ... ... 219
10. Historical Selections: The Romance of a Vanquished King ... ... 221
11. Gleanings from Folk Lore: A Nick Name for Money ... ... 224

PAGE.

## 1912-ம் வருஷம் அக்டோபர்மீ, 7-வது சஞ்சிகை.


1. "பலதானமில்லாதவூர் பாழ்"—"நிதானமில்லாதமனசு நாசகாரணம்" ... ... ... 194
2. ஸ்ரீசங்கரர்—IV. ... ... ... ... ... ... ... ... 197
3. ஆராதைப்பிள்ளை யோலம்! தர்மாம்பிகையிடம் முறையீடு ... ... ... ... 202
4. அல்லன் ஆக்டேவியஸ் ஹ்யூம் ... ... ... ... ... ... 204
5. குஹப்ரஹ்மம் தத்ஸத்: சக்திமான் சக்தி ... .. ... ... ... ... 206
6. விவேகத்திலுலாகாததில்லை ... ... ... ... ... ... ... 210
7. பொறுமையும் பொறுமையும் ... ... ... ... ... ... 213
8. மனிதன் அமைப்பு ... ... ... ... ... ... 217
9. குடிவாழ்க்கை—டி. வி. வெங்கடரமணய்யர் ... ... ... ... ... 219
10. சரித்திர விலாஸம் ... ... ... ... ... ... ... ... 221
11. "ஆட்கொல்லி" ... ... ... ... ... ... ... ... 224


## No. 8. For NOVEMBER 1912.


1. "The Origin of Life": "Evolution of the Soul" ... ... ... ... ... ... 226
2. The Water of Life ... ... ... ... ... ... ... ... 230
3. Betrayed—Motto—"Your sin will find you out" ... ... ... ... ... ... 234
4. Sri Sankara—A Sketch V. ... ... ... ... ... ... ... ... 236
5. Navaratri Poojah 1912 ... ... ... ... ... ... ... ... 239
6. Dusserah or "The Meaning of the Mystic Number Ten." ... ... ... ... ... 243
7. God's Truth ... ... ... ... ... ... ... ... ... 244
8. Tolstoi's Hygienic Maxims ... ... ... ... ... ... ... ... 246
9. The Law of Life Alone Conquers ... ... ... ... ... ... ... 246
10. Welcome Address to Their Excellencies Lord and Lady Pentland (with Overseas Message) ... ... 250
11. His Excellency. The Rt. Hon'ble Lord Pentland ... ... ... ... ... ... 253
12. Welcome after Adieu ... ... ... ... ... ... ... ... 256
13. A Strange Scene ... ... ... ... ... ... ... ... ... 256


## 1912-ம் வருஷம் நவம்பர்மீ, 8-வது சஞ்சிகை.


1. குஹப்ரஹ்மம் தத்ஸத்: சக்திமான் சக்தி II ... ... ... ... ... 226
2. ஸர்வாதேவதாப்ய ஓம் பூர்புவஸ்ஸுவரோம் ... ... ... ... ... 230
3. காட்டிக்கொடுத்ததே கர்மம்—"தன்வினை தன்னைச்சுடும்" ... ... ... ... 234
4. ஸ்ரீசங்கரர்-ஐந்தாம் அத்தியாயம் ... ... ... ... ... ... 236
5. நவராத்திரி பூஜை 1912 ... ... ... ... ... ... ... 239
6. தசராத்ரி அல்லது தசமத்தின் கூடார்த்தம் ... ... ... ... ... 243
7. ஏகம் ஸத்யம் ப்ரஹ்மம் ... ... ... ... ... ... ... 244
8. டால்ஸ்டாயின் சுகாதார நீதிகள் ... ... ... ... ... ... 246
9. தர்மமே ஜயம் ... ... ... ... ... ... ... ... 246
10. சென்னைமாதேவி தன் தலைவனைக்கண் டுரையாடல் ... ... ... ... 250
11. மகாகனம்பொருந்திய கவர்னர் லார்டு பெண்ட்லாண்டவர்கள் ... ... ... 254
12. போனபின் வரவேற்பு ... ... ... ... ... ... ... 256
13. ஓர் அற்புதக் காட்சி ... ... ... ... ... ... ... 256


## No. 9. For DECEMBER 1912.


1. Principles of Progress ... ... ... ... ... ... ... ... 258
2. The Origin of Life in its Collective aspect ... ... ... ... ... ... 260
3. Kartikei Festival ... ... ... ... ... ... ... ... 264
4. Sri Sankara—A Sketch VI. ... ... ... ... ... ... ... ... 267

PAGE.

5. The Redemption of the Miser—A Short Story ... ... ... ... ... ... 270
6. Easy Lessons in Economics XIII ... ... ... ... ... ... ... ... 273
7. India's Ancient and Eternal Ideals ... ... ... ... ... ... ... 275
8. Kartikai Festival ... ... ... ... ... ... ... ... ... 276
9. King Jayasen—A Short Story ... ... ... ... ... ... ... 279
10. *Honi-Soit-Qui-Mal-y-Pense* ... ... ... ... ... ... ... 282
11. Do you want Employment? ... ... ... ... ... ... ... 284
12. Educational Grants ... ... ... ... ... ... ... ... 287
13. A Wonderful Sight ... ... ... ... ... ... ... ... 288

**1912-ம் ௵ டிசம்பர் ௴, 9-வது சஞ்சிகை**

1. "எத்தால்வாழலாம் ஒத்தால் வாழலாம்" ... ... ... ... ... ... 258
2. கந்தர்சஷ்டி—கார்த்திகேயாவதாரம் ... ... ... ... ... ... 260
3. கார்த்திகேய மூர்த்தி—கார்த்திகைத் திருவிழா ... ... ... ... ... 264
4. ஸ்ரீ சங்கரர் ஆறும் அத்தியாயம் ... ... ... ... ... ... 267
5. தனலோபி தர்மரக்ஷை—ஓர் சிறு கதை ... ... ... ... ... ... 270
6. குடிவாழ்க்கை 13-ம் பாடம் ... ... ... ... ... ... ... 273
7. இந்தியாவின் புராதனமான நித்ய லக்ஷியங்கள் ... ... ... ... ... 275
8. கார்த்திகைத் திருவிழா: கும்பசிலம்பலம்... ... ... ... ... ... 276
9. ஜயசேன ராஜன் கதை ... ... ... ... ... ... ... 279
10. கெடுவான் கேடுநினைப்பான் ... ... ... ... ... ... ... 282
11. உத்தியோகம் வேண்டுமா? ... ... ... ... ... ... ... 284
12. கல்வி சம்பந்தமான கிராண்டுகள் ... ... ... ... ... ... 287
13. ஓர் அற்புதக் காட்சி ... ... ... ... ... ... ... 288

## No. 10. For JANUAKY 1913.

1. The Worship of the Ishta Devata ... ... ... ... ... ... ... 290
2. Working for the Good of Mankind ... ... ... ... ... ... ... 293
3. Greed, Guilty-Selfishness and Inhumanity are Short Lived ... ... ... ... ... 294
4. The Delhi-Durbar Celebration :—Abhayahastam or The Supreme Hand of Fellowship ... ... 299
5. The Mother's Lament ... ... ... ... ... ... ... ... 300
6. Sri Sankara—A Sketch—VI. ... ... ... ... ... ... ... ... 301
7. King Jayasen—Short Story ... ... ... ... ... ... ... ... 304
8. Historical Selections ... ... ... ... ... ... ... ... 307
9. The Madras Legislative Council ... ... ... ... ... ... ... 310
10. The Delhi Outrage : Sympathy of the South Indian Masses ... ... ... ... ... 311
11. Three Words of Strength ... ... ... ... ... ... ... ... 313
12. The Story of Dhasarjuna ... ... ... ... ... ... ... ... 314
13. Co-operative Weaving ... ... ... ... ... ... ... ... 316
14. Notes and Supplement ... ... ... ... ... ... ... ... 317

**1913-ம் ௵ ஜனவரி ௴, 10-வது சஞ்சிகை.**

1. இஷ்ட தேவதா உபாஸனை ... ... ... ... ... ... ... 290
2. "மன்பதை செப்பஞ்செயல்" ... ... ... ... ... ... ... 293
3. "ஆட்டுக்கடா சண்டை எதுக்கடா" ... ... ... ... ... ... 294
4. டெல்லி தர்பார் கொண்டாட்டம் ... ... ... ... ... ... 299
5. தனையனைக்கொடுத்த தாயிரங்கல் ... ... ... ... ... ... 300
6. ஸ்ரீ சங்கரர் ... ... ... ... ... ... ... ... 301
7. ஜயசேன ராஜன் கதை ... ... ... ... ... ... ... 304
8. சரித்திர விலாஸம் ... ... ... ... ... ... ... 307
9. சென்னை சட்டநிருபண சபை மீட்டிங்கு ... ... ... ... ... 310

PAGE.

10. டில்லிபாதகம்: தென்னிந்தியா குடிகள் அனுதாபம் ... 311
11. மூன்று மந்திரங்கள் ... 313
12. தசார்ச்சுனன் கதை ... 314
13. கூட்டுறவு நெசவு ... 316
14. குறிப்புகள்—அனுபந்தம் ... 317

## No. 11. For FEBRUARY 1913.

1. The Royal Commission on Public Services in India ... 322
2. The Ravages of the white Ants.—A Lesson from Nature Study ... 325
3. Sri Sankara—A Sketch (*concluded*) ... 327
4. Easy Lessons in Economics XIV ... 330
5. Do you Want Employment? ... 332
6. Money—the Autocrat ... 335
7. Rule Britannia, Rule! ... 336
8. The Wife's Lament and Sati's Prayer. (*Tamil*) ... 337
9. Divine Will ... 340
10. Concussion of the Brain ... 341
11. Health is Wealth ... 343
12. The Proposed Tamil Lexicon by Govt. ... 344
13. Sangeetha Rathnavali ... 345
14. The Supreme Legislative Council ... 346
15. The Wife's Lament and Sati's Prayer (*English*) ... 348

## 1913-ம் ஞு பிப்ரவரி மீ, 11-வது சஞ்சிகை.

1. உத்தியோக சம்பந்தமான ராயல்கமிஷன் ... 322
2. விளைப்பூச்சியென்னும் கரையான் செய்நாசம் ... 325
3. ஸ்ரீ சங்கரர் எட்டாம் அத்தியாயம் ... 327
4. குடிவாழ்க்கை 14-ம் பாடம் ... 330
5. உத்தியோகம் வேண்டுமோ? ... 332
6. பணமென்பது 'ஆட்கொல்லி' ... 335
7. பிரிட்டிஷ் அரசாக்ஷியின் வாழ்த்து ... 336
8. பதியிழந்த சதியிரங்கி மாங்கல்யப் பிச்சைகோறல் ... 337
9. "வருஷகாலமானாலும் வருவது வந்தே தீரும்" ... 340
10. மூளையின் அதிர்ச்சி ... 341
11. ஆரோக்கியமே பாக்கியம் ... 343
12. வெளிவரப்போகிற தமிழ் அகராதி ... 345
13. சங்கீத ரத்னாவளி ... 335
14. ஸார்வ பௌம சட்டச் சபை ... 346
15. பதியிழந்த சதியிரங்கி மாங்கல்யப் பிச்சை கோறல் ... 348

## No. 12. For MARCH 1913.

1. Wrong Multiplies itself ... 354
2. The Law of Life alone Conquers ... 356
3. *Honi-Soit-qui-Mal-y-Pense* ... 363
4. Lack-a day! Thy will be Done ... 366
5. When the Grass-hopper becomes a Burden or The Art of Gracefully growing old ... 370
6. The Boon of Grace from the Bull-Mounted Mother ... 373

## 1913-ம் ஞு மார்ச்சு மீ, 12-வது சஞ்சிகை.

1. "குதிரை தாக்கிப் போட்டது மன்றி குழியுமொன்று கூடப்பறித்ததாம் ... 354
2. தருமமே தலைகாக்கும் ... 356
3. கெடுவான் கேடுநினைப்பான் ... 363
4. "ஐயோ என் கண்ணே!" ... 366
5. "திடகாத்ர ஆயுராரோக்கிய சம்பத்து" ... 370
6. வ்ருஷபவாகனருடை வரப்பிரஸாதம் ... 373

---

இதிலுள்ள ஒவ்வொரு விஷயமும் விவேகசிந்தாமணி ஆசிரியர்க்கு உரிமையானது அப்படியே காபிரைட் ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கிறது.

**The Chitra-Poornami Special—1st May, 1912.**

Full term Copyright secured in every page, part and volume; and the right of reproduction, revision and republication strictly reserved by the Editor and Publisher. Due notice of subsisting Copyright in every issue and article was given and published in the Fort St. George Gazette in 1892. Pilfering prohibited, which please note.

*"Give me not O God, that blind, fool faith in my friend, that sees no evil where evil* is, *but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."*
*"Seek Truth wherever you can find it." But,*
*"Make your choice and stick to it till you reach the End."*

ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**

HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE.".




அன்பேயவன்: அறிவேசக்தி: ஓம் தத்ஸத்] [God is Love: Knowledge is. Power: *Aum*

ஸத்தியமே ஜெயம்—**SATYAMEVA JAYATE.**

புத்தகம். 20.] 1912 ஷ ஏப்ரல் மீ, பரீதாபி ஷ சித்திரை மீ [சஞ்சிகை, 1.

## NOTICE.

The Editor of the *Vivekachintamani* while thanking his contributors for their valuable contributions, would like to draw the attention of the public to the fact that in pursuance of the uniform policy of this journal, articles could be received only on the understanding that the entire copy right in the articles should be vested solely in the Editor It would not have become necessary to mention this matter now but for the fact that literary pilfering is becoming more and more prevalent in the journalistic world; and the intentions of the contributors who have by their free gift of the manuscripts helped to further the objects of the Diffusion of Knowledge Agency which the Editor has been maintaining and working for the public good under great difficulties and trials for the past twenty-five years, are being sought to be frustrated by unscrupulous persons.

C. V. Swaminathaiyar, Editor, & Proprietor V. C.

Lalita Publishing Co., Sole Agents and Managers

S. Subrahmaniem, Joint Hon. Secretary, Vivekachintamani Rev: Committee.

"To sell the mind for money is a greater sin than to sell the body."

1. அறிவைப்பரவச்செய்வதற்கான நம் விவேகசிந்தாமணிக்கு வியாச, விஷய தானம் செய்வோர் யாவரேயாயினும் உண்மையான அந்தர்த்தியானத்தோடு பூர்ணமதஸம்மதமாய் விஷயார்ப்பணஞ் செய்யல் வேண்டும். தானம் செய்தபின் தத்தாபஹாரம் செய்யக்கூடாது. தத்தாபஹாரசிந்தையினர்க்கு விவேகசிந்தாமணி சங்கப்பலகைபோலிடங்கொடாதொடுங்கும்.

2. உழைக்கும்வழி யுணராது பிழைக்கவழி தேடும் சில தப்பிலிகள் நம்மை மோசஞ்செய்யாதபடி விவேகசிந்தாமணியிலுள்ள சுதந்திரமெல்லாமெமக்கேஉரிமையாமென்று சட்டப்படி ஆதிமுதற்கொண்டே ஸர்க்கார் கெஜட்டில் தாக்கல் செய்யப்பெற்றிருக்கிறது.

3. விவேகசிந்தாமணியில்வரும் விஷயங்களையாவது அவைசம்பந்தமான ஸாதன ஸம்யம விவேகவிளக்கப்பேர்களையாவது தர்மவிரோதமாயுபயோகித்துக் கர்மவிக்னம் செய்வோர் பிழைக்கவழிதெரியாப் புல்லியர் புகும் பாழ்நரகிற் 'க்கார் கதியாவர்: அடாஅது செய்தவர் பாடஅது படுவர்: இகபர மிரண்டிலுமிது ஸத்தியம் ஸத்தியம், பலிக்குமென்றேநிஞன் பழனியாண்டவன். வேலுமயிலுந்துணை. ஆண்டானடிமையாய் உழைக்க உடன்பட்டான் கைச்சாற்றிது. ஓ.

விவேக  சிந்தாமணி.

## Hearty Greetings and Best Wishes for a Happy and Prosperous NEW YEAR.

Friendship of old and faithful friends,
Who ne'er forsake, the WORLD commends.—*Kural 809.*

நவில்தொறு நூல்நயம் போலும்
பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு.—குறள்.

Learned scroll the more you ponder,
Sweeter grows the mental food;
So the heart by use grows fonder,
Bound in friendship with the Good.—*Ib. 783.*

புணர்ச்சி பழகுதல் வேண்டா
வுணர்ச்சிதா னட்பாங் கிழமை தரும்.

Not association constant, not affection's token bind;
'Tis the unison of feeling friends unites
of kindred mind.—*Ib. 785.*

## புதுவருஷப் பிரளயம்!

புது வருஷம் பிறந்தது. பரீதாபி வருஷம் பரிதாபமாய்ப் பிறந்தது. விரோதிகிருது வுடனே விரோத கிருத்தியமும் முடிந்தது. கூடா நட்பால் குடிகெடுமென்பது உண்மை. ஆகாத நட்பை ஆய்ந்தாயல் மஹா கஷ்டம். போகாத வூருக்கு வழிதேடல் போல ஆகாத நட்பு அநர்த்தம் விளைக்கும். இந்த அநர்த்தம் விளைந்து நீங்கியதே பெரும் புண்யம். "பெரிய மனுஷாள் சமாசாரம்" என்றால் இப்பொழுதுதான் அர்த்தம் தெரிந்தது. பணத்தால் பெரியவன் குணத்தால் பெரியவனில்லாவிடில் எல்லாம் சங்கடமாய்த்தான் முடியும்.

உலகத்தில் அன்பு, அபிமானம் என இரண்டுண்டு. பற்றறப்பற்றி நிற்பது அன்பு, பற்றுறப்பற்றி நிற்பது அபிமானம். முன்னது பவோபவம். பின்னதுமனோபவம். அன்பு அழியாதது; அபிமானம் அழியும். ஆகையால் அன்பு பழகப் பழகப் பெருகும். அபிமானமோ பழகப்பழக இறுகும். இறுகினால் அபிமானம் பிடிமானமாகும். பிடிமானமென்றால் உறுதி.

உலகமெல்லாம் அந்துப்பூச்சிபோல் இன்பை நாடித் துன்பில்விழ்ந்துழல்கிறது. "காதலிருவர் கருத்தொருமித் தாதரவுப்பட்டதே இன்பம்" என்று ஔவையார் கூறியிருக்கிறார். "கருத்தொருமித் தாதரவுப்பட்ட' விடத்திலின்பம் போல், கருத்தொரு மிக்கா திருவரைத்தாய்ப் பிரிந்து பேசுப்பட்டவிடத்தில் துன்பம். இன்ப துன்பமிரண்டும், உணர்ச்சி ஒன்றுபடல் இரண்டுபடல் என்பதை யுணர்த்தும். உணர்ச்சி யொன்றுபட்டவிடத்தில் நட்புண்டாகும். உணர்ச்சி பேதப்பட்ட விடத்தில் பகையுண்டாகும். நட்பும் பகையும் உணர்ச்சியிற் புணர்ச்சியும், புணர்ச்சியிலுணர்ச்சிநீக்கமுமாகும்.

உணர்ச்சியிற் புணர்ச்சி யென்றாலென்ன? உர்ணச்சி யென்றால் உள்ளறிவு. உள்ளறிவுடன் ஒன்றுபட்டொடுங்குவதே உணர்ச்சியிற் புணர்ச்சியாம். உள்ளறிவிலொடுங்கக் கள்ளமனம் கரையவேண்டும். கள்ளமனமென்றால் உள்ளத யுள்ளபடி பர்றாது சங்கல்ப விகல்பங்களில் அகப்பட்டு உழன்று வருவதாம். சங்கல்ப விகல்பமென்றால் நினைப்பு மறைப்புமாம். நினைப்புண்டானால் மறைப்புண்டு. மறைப்புண்டானால் நினைப்புமுண்டு. நினைப்பும் மறைப்பும் சேர்ந்தது சித்தவிருத்தி. இந்த சித்தவிருத்தியை அடக்கியாள வல்லவனோ அவனே நட்பாளன்.

"புணர்ச்சிபழகுதல்வேண்டா
உணர்ச்சிதான்நட்பாங்கிழமைதரும்."

என்பது திருக்குறள். ஒருவரோ டொருவர் சேர்ந்து பழகுதல் வேண்டாம். அல்லது அபிமானத்தில் பழகி யிறுகுதலாகிய உறவும் வேண்டாம்: "உணர்ச்சிதான்"—உள்ளறி வுண்மை யுணர்தலாகிய ஒன்றே நட்பு என்று சொல்லப்படும் உரிமைதரும். இதுவே நட்புக்கு இலக்ஷியமாம். இந்த உள்ளறிவுண்மையுணர்தல் யாரிடமில்லையோ அவர்களிடத்து உண்மையான நட்பு என்று சொல்லப்படும் நேசமுமில்லை யாம்.

நேசம் என்பது உள்ளன்பு காரணமாக உண்டாகும் பற்றிலாப்பற்றுக்குக் காரணமாதலால் அது இதயகமலத்தை மலர்ச்செய்யும். ஏனெனில் உள்ளன்பினுதித்த நேசத்தால் உண்மைப் பிரகாசம் ஒளிரும். உண்மை பிரகாசிக்கப் பிரகாசிக்க இதயம் சூரியனைக் கண்ட தாமரை போல் மலரும். இப்படி இதயம் மலர மலர அன்பும், ஆற்றலும் விரியும். அன்பு வளர வளர கூடுமையும் சாந்தமும் அதிகரிக்கும். சாந்தம் பயிலப்பயில உபசாந்தமாகும். "சாந்தம்" பிழை பொறுக்கும்சக்தி யின்றால், "உபசாந்தம்" பிழையறுக்கும்சக்தி தரும். திருமந்திரோபதேசம் செய்த திருமூலதேவரும் "சத்திக்கு வித்துத் தனதுபசாந்தமே" என்றாரல்லவா? "சத்திக்கு வித்தான" உபசாந்தத்திலிருந்து ஆற்றல் என்கிற நினைத்தது முடித்தலாகிய சாதனசாத்திய சாமர்த்தியம் விருத்திக்கும். உபசாந்தம் என்றால் (Exceeding Peace of Mind.) "பதறாத காரியம் சிதறாது" என்று சொல்லும் பழமொழியின் கருத்தும் இதுவே! காரியத்தில் மனம் சலிக்கும். மனம் சலித்தால் ஜ்யோதிமத்தியிலுள்ள சுத்தமனம் சங்கல்ப விகல்பமாகிற அலைகளால் மூடப்பட்டு அமைதிக்கை விட்டுக் கொந்தளிக்கும். அதனால் மனத்தெளிவு குறையும். தெளிவு குறையக் குறைய அருள் மறைந்து இருள் மூடும், மருளும் பற்றும். "மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்பதாக மருளடைந்த மனக்கண்முன் ஜகம்விரியும். மருள் என்றால் மயக்கம். ஆதலால்தான் "மனமாயை"யே "மாயை" என்றார் திருமூலர். "காலவஞ்சனம்" என்று சொல்கிற பரமசாதனம்போல் "மாயைமயக்கம்" என்கிற பரமசாதனத்தால் இந்த மாயையை மயக்கவேண்டும். உன்மனஸாகிய ஸ்படிகாத்மக மனதை மயக்கும் இம்மாயையை மயக்கினால், "கைப்பாலே ககப்பென்னும் மாயப்புப்போகும்!" என்றதுபோல இந்த மாயை மயக்கினால் மனமாயை (மனக்குழப்பம்) தீர்ந்துபோகும். அப்படியென்றால் சங்கல்ப விகல்பங்கள் அற்றுப்போம் என்று அர்த்தமில்லை. ஆனால் நிர்விகல்ப சமாதியில்பழகினபழக்கபலத்தால் தாமரையிலையில் தண்ணீர்போல சங்கல்ப விகல்பமான அசுத்தமனதோடுகூட தாதாத்மிய சம்பந்தம் பாராட்டும் பிணக்குவிட்டுக் குணக்குத்தீர்ந்து உண்மையறியும் உன்மனஸ் ஸ்படிகலிங்கமாய்ச் சோபித்து நிற்கும். ஸ்படிகத்தில் விளங்கும் செம்பரத்தப்பூவின் சிகப்புப்போல, உன்மனவில் அசுத்த மனவின் ஸங்கல்ப விகல்பங்கள் பிரதிபிம்பித்தாலும், அவை சாயா மாத்திரமாய்த் தோன்றி ஸ்படிகத்தின் சுத்தங் கெடாதது போல் உன்மனவின் தெளிவைக் கெடுக்காது. இப்படிப்பட்டவர்களுடைய நட்பே விரும்பத் தக்கதாம்.

> "கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
> விடாஅர் விழையு முலகு."—திருக்குறள்.

"உரிமையறாது பழையதாய் வந்த நட்பினையுடையாரது நட்பினை, அவர் பிழைநோக்கிவிடுதல் செய்யாதாரை, உலகம் (உண்மையாளர்) நட்புக்குறித்து விரும்பும்."

"கெடார்" என்று பாடமோதில் "நட்புத் தன்மையிற் கெடாராகி" யென்று அர்த்தம் செய்துகொள்ளல் வேண்டும்.

"பழையதாய்" என்று பரிமேலழகர் கூறிய உரையில 'பழமை' யென்றதற்கு 'காலஞ்சென்ற' என்று அர்த்தம் செய்யக்கூடாது. இங்கே அது வன்று. 'பழமை'யென்ற பதத்தால் குறிக்கப்பட்ட பொருள் பின்னை? யென்னவெனில்?

> "பழமை யெனப்படுவ தியாதெனின் யாதுங்
> கிழமையைக் கீழ்ந்திடா நட்பு."

"பழமையென்று சொல்லப்படுவது யாதென்று வினவின், அது பழமையோர் உரிமையாற் செய்வனவற்றைச் சிறிதுஞ் சிதையாது அவற்றுக்கு உடம்படும்."—பரிமேலழகருரை.

"உரிமையாற் செய்வனவாவன" என்பதற்குப் பரிமேலழகர் கூறுவதாவது:—"கருமமாயின் செய்யுங்காற் கேளாது செய்தல், தமக்கு வேண்டியன தாமே கோடல், பணிவு அச்சங்களின்மை யென்றிவை முதலாயின. சிதைத்தல்=விலக்கல். இதனாற் பழமையாவது காலஞ்சென்றதன்று, இப் பெற்றித்தாய (இப்படிப் பட்டதாய) நட்பென்பது கூறப்பட்டது. நட்பிற் கிலக்ஷணம் என்ன வெனில்:—

"நட்பிற்குஉறுப்புக் கெழுதகைமை மற்றதற்கு
உப்பாதல் சான்றோர் கடன்."—திருக்குறள்.

நட்பிற்குஉறுப்பு=நட்பிற்கு அவயமாவன
கெழுதகைமை (கிழமை)=நட்டார் உரிமையாற் [செய்வன
மற்றதற்குப்பாதல்=அதனலவ்வுரிமைக்கு இனிய [ராதல்
சான்றோர்கடன்=அமைந்தார்க்கு முறைமை.

நட்பும், கெழுதகைமை யென்ற சொல்லும் 'கிழமை யாகிய உரிமை பாராட்டலும் வேறன்றாதலின் பின்னதை நட்புக்கு உறுப்பு=அவயவம் என்றார்.

அவயவமும் அவயவியும் தாதாத்மிய சம்பந்தத்தாலும் "அங்கபங்க" லக்ஷணத்தாலும் வேறிலாது ஒன்றேயாதல்போல, 'நட்பும்' நட்புரிமையாகிய 'கிழமை'—'கெழுதகைமை' யும் வேறன்று. ஒன்றே (ஒருதன்மையே) யாம்.

"தாமுடம்படாதவை யேனும் நட்டார் உரிமையாற் செய்தவற்றிற்குத் தாம் செய்தாற்போல் உடம்படாராயின், அவரோடு பழையதாய் (உரிமையாய்) வந்த நட்பு என்ன பயனைச் செய்யும்!" என்பதுணர்த்தப் பின்னும்,

பழகிய நட்பெவன் செய்யும்? கெழுதகைமை
செய்தாங் கமையாக் கடை.

என்றார் தெய்வப்புலமைத் திருவள்ளுவனர்.

"நோதக்க நட்டார் செயின்"—தாம் வெறுக்கத் தக்கனவற்றை நட்டார் செய்தாராயின் அதற்குக் காரணம் 'பேதைமை' யென்றுவது, 'மிக்க வுரிமை' யென்னும் 'பெருங்கிழமை' யென்றுவது கொள்க. 'பேதைமை' இழவூழால் வரும் பேதைமை யாவர்க்கு முண்டாதலால், அவர் பேதைமையால் தமக்குத் தீங்கிழைத்தார் என்றுவது, ஊழ்வகையால் தம்மின் வாறபாலது 'பெருங்கிழமை' யென்கிற 'ஒற்றுமை மிகுதிபற்றி அவரால் வந்ததென்றுவது கொள்ளல்.வேண்டும். இப்பொருளடங்க,

"பேதமை யொன்றோ பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின்"—என்றார்!

'பேதைமையும்' பெருங்கிழமையும் ஒன்று சேர்ந்தால் பிரளயகாலம் வந்தது போலத்தான். ஏனெனில் பிரளயத்தைத் தடுப்பாரில்லாதது போல மடைமையுடையாரும் தீங்கிழைக்கத்தக்காராய்த் தீவினையாலமர்ந்தாரும் (Fool and Knave combined) ஒன்று சேரின் தர்மம் தலைகவிழ்ந்து போகும். தர்மம் தலை கவிழ்ந்தால், அதர்மம் தலையெடுக்கும். தலையெடுத்த அதர்மம் பிரளயத்தில் தானழியும். அழியுங்கால் தர்மம் முன்போல தலை யெடுக்கும். அதர்மம் தலையெடுத்ததனுல் பிரளயகாலத்தை யெதிர்பார்த்து நல்லார் பொல்லார் தம் பொய்மலிவைப் பொறுத்திருத்தல் வேண்டும்.

இதுகான் சரண்புகு சிவனுணை!
சிவனர் சிவஸ்வாமி சொல்லாணை!
ஸத்யம், ஸத்யம், புநர்ஸத்தியம்
குமர குரபரன் சாக்ஷியம்மா!

குமரஸாம்பவன்.

ஓம் தத்ஸத்.

—:•:—

## "Hamlet Redivivius"-A By-Play.

*(Sequel to "Redivira—A Drama" by L. C. Innes Esqr. I. C. S. of Serenoaks, Retired Judge, Madras High Court.)*

### ஹேமலதாநந்தவிக்ரஹம்.

"த்ரிபுரீ த்ரிபுராந்தஸ்தா த்ரிபுராம்ருதபாலிநீ !"

"நின்யோகக்ஷேமத்தைப்பற்றிக் கேட்கவிரும்புகிறேன்"
—பழனியாண்டவர்.

———:(*):———

### அங்கம் I. திரிபுரீ.

சித்சக்திச்சேதநாரூபா ! ஜடசக்தி: ஜடாத்மிகா !
காயத்ரீவ்யாஹ்ரிதி:ஸந்தியா!த்விஜவ்ருந்தாநஸேவிதா

### பங்கம் I.

"தண்ணீர்நிலநலத்தால் தக்கோர் குணங்கொடையால்
கண்ணீர்மை மாறாக் கருணையால்"—அஃதேபோல்
எண்ணீர்மையுள்ளாரால்எழில்புரம்தானேங்கப்
புண்ணீரழிவுடையார்பொய்மலிவாலழியும் புரீ !"

### I. அக்கிரம விக்கிரமம். (The foul deed)

பெத்துநாயக்கன், முத்தியாலுசெட்டியா
ரிவர்கள் வாழ்ந்த காலையில், அவர்களுடைய
பெயர் புனையப்பெற்று விளங்கிய முத்தியாலுப்
பேட்டை, பெத்துநாயகன்பேட்டை யென்கிற
நகர்ப்புர கிராமங்கள் வெள்ளைக்காரர்கள் வந்து
வியாபாரம் நடத்தியதுபோய் அதிகாரம் செ
லுத்துவாரானபோது, பல்கிப் பெருகிப் பரந்த
தோர் பட்டினமாகி வளர்ந்தது. அப்பட்டினம்
பறைப்பட்டணமென (Black Town) இழி
பெய்ர் புனைந்து செழித்தோங்கி வளர்ந்தது.
1886-ம் வருஷத்தில் இப்பொழுது டில்லி சக்ர
வர்த்தியாப் முடிசூட்டப்பெற்ற நம்மரசர் இள
வரசா யிருந்து தமது பத்நியாரோடு இந்நக
ருக்கு விஜயமாக வந்தபொழுது, சென்னை
வடபிரிவு போலீஸ் டிப்டிகமிஷனர், ("Black
Town")என்ற இழிபெயர்மாற எழில்பெயரொ
ன்றளிக்கவேண்டி யதைப்பற்றி நகரவாசிகளை
ஆலோசனைகேட்டு வந்தார். அப்பொழுது த்ரி
புரமும் ஒருபுரமாப் உலகளந்த மாதவனடிபணி
ந்த மாதவனொருவன் த்ரிபுராந்தஸ்தனைய் மந்த்ர
யோகத்தி லழுந்தி நாமதாரணை யப்பியாஸம்
செய்துவந்தான். அத்தபோதனன் நாதாநுஸந்
தானம் செய்து "நாதவடிவாகியமஹாமந்தி
ராதி ரூபியை" ஹிருதய சமலத்தில் பூஜித்து
அர்ச்சித்து அங்க லிங்க சங்கம ஸ்வரூபத்தில்
லயித்து நின்றான். அத்தருணம் "இழிபெய
ரழிய எழிபெயரொன் றளிக்கவேண்டிப்" போ
லீஸ் கமிஷனருடைய வேண்டுதலானது நாத
முடி வெய்திய மாதவன் மந்திரதிருஷ்டியில்
பட, அப் புண்ணியனும் அப்படித் தோன்றிய
தோர் எழில்புரியை ஆனந்தபூரிதனாய்க் கண்
டனுபவித்து "சித்சக்திச் சேதனாரூபா, ஜட
சக்தி : ஜடாத்மிகா !" என்றும் "காயத்ரீ வ்யா
ஹ்ரிதி : ஸந்தியா த்விஜ்வ்ருந்தாந ஸேவிதா !"
என்றும் உள்ளம் குளிர ரஹஸியநாமங்களால்
துதித்துத் தான் கண்டதோர் சோதிநக ருண்
மை விளங்க Black Town என்னும் இழிபெய
ரழிய எழில்பெயர் புனைவான் சோதிநகர் என்
னும் உண்மையை "மனிதரில் அரசனுமேவன்"
என்றவன் வாக்கையுன்னி "ஜார்ஜடவுன்" என்று
பேர்புனையக்கருதி அஃதை உலக வழக்கி லுண்
மை விளங்கப் பத்திரிகைக் கெழுதிப் பார்மன்
னன் மனங்குளிர அவன் பேர் தானுமதுவாக
அப் பேர் சூட்டத் திருவுளம் சாதிக்கவேண்டு
மாய்க் கேட்டுக் கொண்டான். அக் கோறிக்கை
யும் பலித்தது. இளவரசும் இந்நகரைவிட்டேகு
முன் அந்நகருக்கு "ஜார்ஜ்டவுன்" என்கிற
பேரளித்துப் பூரிக்கலானார். இது 1896-ல்.

பங்குனி யுத்தரம் பவித்ர நாளென்பர் மே
லோர். ஆயினும் அப்படிப்பட்ட வோர் புநிதமா
நாளில் "ஏப்ரல் முதலாம்" "புண்ணீரழிவுடை
யார் பொய்மலிவாற் புன்னுளாமந்த" * (All-
fool'sDay) நாளையிலே, பகலவன் போய் மலே
வாயில்விழுந்த பின்னர், தேரடங்க வூரடங்கும்
திவ்ய கண்டாமணி யெட்டு ."கண் கண்ணார்க
ணார்" என்றே கணகணவென்றெண்முறையடிக்
கப் புன்மதியார் கூடியங்கே பொய்மலிவால் நக
ரழியப்புண்ணியனும் 'புராந்தஸ்தன்'(The Citi-

* First April 1912.

zen True) பொய்யுடலம் பற்றியம்மா, உள்ளம் பதைக்க அந்தோ ! உண்ணீர்மை தான் கலங் கப் புல்லியர் பலர்கூடி யம்மா! போலியதிகாரஞ் செய்துபொன்னகரும் புரமழிய நல்லிதய மன்ன னவன் நாணங்கெட அவன்வலியைப் பொற் புடைய "ஹேமலதா" வாழ்வழியச் செலுத்தி னரே!

"ஐயகோ! என்செய்வேன்யாரைநான் அடுத்திடுவேன்!
மெய்யகோ! யான்பொய்யேன்மெய்விதிர்ப்பப்
[பொறுத்திடுவேன்!
பொய்யவோ! புல்லியவோ! பொய்மலியப்பெற்றி
[யவோ!
கையவோநான்பிறந்தேன்நமன் வாய்ப்பட்டிறந்
[திலனே!"

"ஐயகோ! புண்ணியனே! யாரிடம்போய் முறை யிடுவேன்!" என்றழுதடங்க, தர்மதேவதை வல க்கால் தூக்கிப் பின்வரும் பண்ணுக்கிசைய நிருத்தம் செய்யலானாள்:—

பண்.

அக்ரமமலிய விக்ரமங் காட்டி
உக்ரமவிக்ரமனுரிமைக்கவர்ந்து
விக்ரமசக்ரம்சுழல்வழியுணரா
துக்ரமவிக்ரம அக்கிரமம்செய்தான்!

"காயத்ரீவ்யாஹ்ரீதி : ஸந்தியா" வென்று இரு பிறப்பாளரால் எப்பொழுதும் சேவிக்கப்படும் த்ரிபுரவாஸிநியான "ஹேமலதா"வை ஐயோ! அக்கிரமமாகக் கொன்று கொலைபாதகத்தைக் கட்டிக் கொண்டார்கள் பாவிகள்!

"ஹேமலதா" வென்றால் பொற்கொடியாள் என்று அர்த்தம். இந்த ரூபம் "சித்சக்தி சேதநாரூபா ஜடசக்தி: ஜடாத்மிகா!" என்ற ரஹஸிய நாமங்களின் தரிசனம் கண்டவர்களு க்கு "ஹேமலதா" என்ற நாத நாமக்கிரியை யின் லக்ஷண லக்ஷியம் விளங்கும்.

பொற்கொடியாளைக் கொன்று பெரும்பாத கத்தைக் கட்டிக்கொண்டு ஊர்ச் சோற்றைத் தின்று வளரும் தூர்த்தப் பிசாசங்களான கோமாளிக் கூட்டம், அவள் பிணத்தைக் 'கோமேப்பாவை கட்டி யிழுப்பதுபோல' இழுத் துச் சென்றனர். ஆகாசவாணி அவளுடைய ஆயிரம்வாய்திறந்து ஒப்பாரி பாடி 'ஹேமலதா' கொலையுண்ணவும் அவள் சரீரமாகிய த்ரிபுரி யைத் விட்டுப் பிரிந்த அந்தராத்மக, த்ரிபுராந் தஸ்தாவைத் தேடியடைந்து "ஐயகோ! அநர்த் தம் விளைந்தது!" என்று முறையிட்டழலானாள்.

I.

பொன்னேயென்பொற்கொடியே
பொன்னணிபூணுமணங்கே யென்
அன்னே! யென்னருந்தவமே!
பொன்னேயுன்னைப்பூதலத்தோர்பலியிட்டாரே!

II.

ஹேமலதா! என்னரசே! ராமநகர்சீர்பெறவே
கோமளமாக்காத்தருளும்கற்பரசீ சொற்காசே!
ஹேமலதா! சீதையம்மே! ராவணன்சீரழித்தவளே!
சியாமளையே! பாதேவீ! புரமெரியப்பார்த்தவளே!

III.

பேடுவரும்பின்னேமுன் ஜோடிவருமாறேபோல்
கேடுவரும்பின்னேமுன் கெட்டுவரும்மதியம்மா!
நாடுநகரெல்லாமுன் நலத்தையெதிர்பார்த்திருக்கக்
கேடுகெட்டமானிடர்க்குக் 'கொடும்பாவை'யானாயே!

IV.

கொடும்பாவையாகியம்மாகுல மறுக்குந்துதிபானுய்
கெடும்பாவிகெட்டழிந்தால் 'கொடும்பாவை'யேன்
செய்வான்!
படும்பாடுபட்டலுத்துக் கெட்டழிந்தகேடுவானவன்
கொடும்பாவையுனையிழுத்துக்குலபங்கம்செய்தா
னேயோ!

V.

அக்கிரமஞ்செய்தவன்விக்ரமனானென்
துஷ்க்ரமகிஷ்க்ரமதுட்டரைச்சேர்ந்தான்
சொற்கிரமமறியாச்சூன்யசம்பன்னன்
விக்ரமராஜன்வேதாளக்கதையாச்சே!

அங்கம். 1. பங்கம் 1. முற்றிற்று

———:-:———

## Depressed Classes-Cause and Cure.

### Public Meeting at the Anderson Hall.

At the second anniversary meeting of the Depressed Classes Mission which was celebrated on Monday evening (15th April) with the Hon'ble Mr. Justice Abdur Rahim in the Chair, Mr. C. V. Swaminathaiyer made a telling speech on the Cause and Cure of depression with the utmost feeling. He effectively placed before the audience the *idea* and the *ideal* of the term "depressed class." Depression

was the direct effect of suppression of the naturally expansive soul. He stood before the audience saying that he was there as a real true specimen of the depressed class. They would not be surprised, at his so doing, if they exactly knew and comprehended and not only comprehended but *realised* what it was which made the depressed classes what they were. He had himself for six years now shared their life, their sufferings, their pangs and woes. His cultivated tastes and feelings made him feel their sufferings a thousand times more. They suffered in silence like dumb driven cattle. He cannot suffer like them. The cultivated intelligence of man would not let the unjust oppressions of the previleged class to enter the soul like iron and there rust. For, all sufferrings of man were intended to make him *think* and if one had subdued the modifications of the thought-making mind, suffering then would become evolutionery and an uplifting force instead of its being a depressing load. The sufferings of man must, of course, enter the soul, but the Altar-Fire of Consciousness—the *Chidagnikunda*—which it was the duty of every true man (Brahman) to guard and take care of, converted the iron into well-tempered steel. And man's sufferings then found fitting expression in darting words which entered the heart because they came from the heart though it must come round about through the brain. Language was the slave of thought, as thought itself was the outcome of religious feeling—and when that feeling was chastened and purified it would become intuitive vision.

He paid a high compliment to the lady speaker who preceded him, for it gladdened his heart to see her speak. He put it to the audience that that speaker was another specimen of the depressed class uplifted, for, there was no class more depressed than our womankind. And because the present-day Indians kept them depressed, they found themselves fit for nothing better than be hewers of wood and drawers of water. They had lost their originality for thinking; and all that modern education could make of them, was at the best mechanical quill-drivers, hair-splitting lawyers and senseless agitators, or the worst of them all, political mountebanks.

The conventional depressed classess were *depressed* because their growing intelligence was cruelly and tyrannically suppressed. The talk about giving them doles and feeding merely the animal in them was absurd. For, the speaker glowing with emotion in his face, put it to the audience and asked :—"Who amongst us, the cultivated classes, are more deserving of being fed from the produce of plain hard work—of tillage, toil and industry, than the so-called depressed classes? They are and they form the real wealth of the nation and their neglect of them is not only shameful, but suicidal to the best interests of the nation. They are treated like outcasts of society and their depressed condition is due not to any inherent depratvity of their own,—for depravity in its true sense is not confined to any class as such, the highest having their own share of it as the lowest,—but because the privileged classes will not have the honesty and straightforwardness to recognise merit where it is found and care more to safeguard their own vested interests and clannishness than to portect the true interests of society which according to the eternal laws of Evolution,—Social, Spiritual or Political, gives the palm to "the man who earns his bread with the sweat of his brow," and not to him who lives on the earnings of the weather-beaten tillers of the soil and the horny-handed sons of toil." He told the audience that he presented himself to them as the specimen of a man who could easily be taken for a thief and a house-breaker, not because he was capable of it, but because, forsooth, the privileged and monied class who were prone to become a pest of society when left uncontrolled, would insist on his being taken as such to guard their own interests, and the Government, in every country, was in the hands of the privileged class. "Man is, after all, the measure of his office great or small, as the heart undoubtedly is the unerring measure of the man." A petty man might bring a high office he holds into contempt by the pettiness of his little soul as a man with a large-heart might imbue the lowest office and position in society allotted to him with the highest dignity as did Nanda—the Pariah Saint, who born of the depressed class, uplifted the whole of depraved humanity in the uplifting of his own great soul, clothed though it was in a Pariah body. And this was an illustration of the inborn dignity of soul which was from God and striving ever to reach to God—which had become one of the national traditions of the country and celebrated every year with much *eclat* on what to the Hindus is "the All-Saints' Day" at Mylapore.

*Moral:—*

Depression sure by suppression is caused I think,
And suppression too, I pray you all bethink,
Is the result of repression simple and pure!
Remove it then by all means and pure bliss secure!

*—From the Daily Papers.*

—(-)—

## The Passing of the Jagadguru Sri Sankaracharia Swamigal of Sringeri.

## ஸ்ரீ ஜகத்குரு சங்கராசாரிய ஸ்வாமிகள் ஐக்கியம்.

—:o.—

ஸ்ரீங்கேரியில் ஆதி சங்கரரால் ஏற்படுத்தப் பட்ட ஸாரதா பீடத்துக்கு அதிபதியான ஸ்ரீ ஜகத்குரு ஸங்காராசாரிய ஸ்வாமிகள் மார்ச்சுமீ 20உ புதன்கிழமை யன்று 11-மணிக்கு ஸ்ரீங் கேரியில் தமது "நித்யாநந்த சுகிருத நிலேக்கு எழுந்தருளி ஐக்கிய மடைந்து விட்டார்'

என்று வாசிக்கத் தேகம் சிலிர்த்து "உள்ளக் கொழுவூறுகிறது." "உள்ளக் கொழுவூறில் கள்ள மலமழுக்கலாம்' என்பது முதுமொழி. இந்த மஹான் ஸாரதாபீடத்துக்கு வந்த 62-வது சங்கரர் என்று சொல்கிறார்கள். இவர் மஹாஸமாதியடையுமுன் இவருக்குப் பின் பட்டத்துக்கு வர வேண்டியவரைத் தெரிந்தெடுத்து நியமிக்காமல் ஐக்கியமாய்விட்டார் என்று சொல்கிறார்கள். இது எப்படியாயினும் பத்திரிகைக் கெழுதுகிறவர்கள் பற்பல பேர்களைச் சொல்லிப் பலவிதமா யெழுதுகிறார்கள். பட்டத்துக் குரியவர் யாராயினும் தாமே விதிப்படி வந்து சேருவார். அதைப்பற்றி நாம் விசாரிக்கத் தேவையில்லை. அப்படியே ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இப்பொழுது மஹாஸமாதியடைந்த மஹான் யோகசாஸ்திரத்தில் மிகவும் தேர்ந்தவரென்று புகழ்பெற்றவர். தீர்க்கதரிசனசித்தி பெற்றவர். இவர் ஆதிசங்கரருக்கு காலடியிற் கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்து முடித்ததொன்றும், தர்ம ஸ்தாபனார்த்தம் பெங்களூரில் ஸம்ஸ்கிருதவேத வேதாந்த பாடசாலை யேற்படுத்தியதொன்றும் இவரை தீர்க்கதரிசியென்று நன்றாய் காட்டுகிறது. தீர்க்கதரிசன ஸித்திபெற்றவர்கள் "அகங்கண்டது புறஞ்சொல்லேல்" என்ற ஆஜ்ஞைக்குட்பட்டவர்களா யிருக்க வேண்டியவராதலால் இவர் "அகங்கண்டது புறஞ்சொல்லாமற்றானே" அகமும் புறமும் ஒற்றிருக்க காலடியில் சங்கராலயமும், பெங்களூரில் ஸமஸ்கிருத பாடசாலையும் ஏற்படுத்திவிட்டுத் தமது வேலை முடிந்ததென விதேக கைவல்ய முக்தி யெய்திவிட்டனர் போலும்.

இந்த தேஹம் கர்மமுள்ள மட்டுமே நிலைத்து நிற்கும். "கர்மமுற்றும் ஒழிந்த பின்னர் கரைந்துபோகும் நிறைவெளியில்" என்பது உண்மை. யோகதரிசனம் என்பது அங்க-லிங்க-சங்கமம் வரையிற் போகும். அங்கம் என்பது உபாஸகன்; லிங்க மென்பது உபாஸியம்; இவ்விரண்டு மொன்றாகக் கூட்டிவைப்பது உபாஸனை. "உபாஸக-உபாஸிய-உபாஸனை" மூன்றும் ஒன்றாகக் காண்பது திரிபுடியனுபவம்.

"திரிபுடியனுபவம்" என்றால், அது திரிபுடி ஸாஹித்தியமா, அல்லது திரிபுடி ராஹித்தியமா? என்று கேட்பார்கள். இது பரோக்ஷ ஞான முதிர்ந்தவர்கள் கேட்கும் கேள்வி. அபரோக்ஷானுபூதிச் செல்வர்களுக்கு இந்தக் கேள்வி யுதிக்கவே யுதிக்காது. ஏனெனில் அனுபவம் என்பது 'அனுபவிக்கப்பட்ட பொருள்' அனுபவத்துவாரா 'அனுபவிப்பானில்' ஒடுங்கி அப்பிலுப்புப்போல் ஐக்கியமா யிருப்பதேயாதலால் "திரிபுடியனுபவம்" என்பது திரிபுடிக் கதீதமாயுள்ள ஒன்றில் திரிபுடி லயிப்பதேயாகும். அப்பில் (ஜலத்தில்) கரைந்த உப்பு, அதினின்று வேறாகாதிருந்து, அப்பு காய்ச்சப்பட்டபோது உப்பு மாத்திரமாய் எஞ்சிநிற்பதுபோல, திரிபுடிலயம் என்பது திரிபுடி யொழிந்த ஒழிவாம் அதிபதத்தில் திரிபுடி யொடுங்க, அவ்வொடுக்கநிலை தவறாதிருக்கில், அதன் முதிர்ச்சியில் மோனம் என்று சொல்லும் நிஜபதத்தில் ஐக்கியமாகி மோனாதீதமான வஸ்துவையடைந்தும், அவ்வொடுக்கநிலை தவறினால் அப்பிலுப்புத் தோன்றியதுபோல, ஒழிவிலிழிவாம் திரிபுடி தோன்றக் காரணமாகி அசிபத ஐக்கியநிலை யென்கிற யோகஸம்யமஸித்தி தோன்றியும் விளங்கும். யோக ஸம்யம ஸித்தியென்பது திரிபுடிஞானம் அதற்கப்பாலுள்ள "ஒழிவிலொடுக்கம்" என்பது திரிபுடியனுபவம். திரிபுடிஞானம் யோகாப்பியாஸத்தின் முடிவு. திரிபுடியனுபவம் ஸமாதிஸித்தியின் முடிவு. ஒழிவிலொடுக்கமுங் கடந்த மோனஸித்தி "திரிபுடியனுபவாதீதமான" நிஜபதம். நித்த முத்த சுத்தப் பரம்பொருளாகிய "அத்வைதவஸ்து" மாத்திரமே திரிபுடிராஹித்தியமாயுள்ளது. ஆதலால் புஸ்தகங்களையும் சாஸ்திரங்களையும் மட்டும் வாசித்துவிட்டு, அல்லது, ஏதோ பூர்வஜன்மபுண்யத்தால் ஸித்தித்த ஸாதுஸங்க மஹிமையினாலுதித்த அபரோக்ஷ

ஞானத்தை மட்டும் கொண்டு அபரோக்ஷானுபூதியினுண்மையை அறிந்துவிட்டதாக அழிமதம் பேசுவது அசுரபர்வம் முதிர்ந்த அசத்த்துக்கள் வார்த்தையன்றி வேறொன்றுமில்லை. அது வைகரிமாத்திரமா யிருந்து விகாரம் விளைக்குமேயன்றி பரைவாக்கு மட்டும் சென்று சங்கல்ப மூலத்தை யுணர்த்தி நிர்விகல்ப ஞானமளிக்காது. திரிபுடி ஞாநாநந்த நிலையிலிருந்து "செய்வனதிருந்தச்செய்" என்கிற முதுமொழிப்படி செய்கடனைச் செய்து முடித்துத். திரிபுடி யனுபவானந்த "அதீதநிலையில் ஒடுங்கப்பெற்ற குருமூர்த்திக்கு நமஸ்காரம், நமஸ்காரம், நமஸ்காரம்," என்று திரிகாலத்தும் நமஸ்காரம் செய்து அவர் திருவடி ஞானம்தந்த தாதாத்மிய நிலையிலிருந்து சலிப்பின்றித் தொழுது நிற்கிறோம்.

ஓம்தத்ஸத்.

---

## SISTER NIVEDITA.

### நிவேதிதை யம்மன்.

"In the world you will have tribulations, come unto me, I will give ye Rest.—*Jesus Christ.*"

பங்குனிமீ திருமயிலாப்பூரில் நடந்த அறுபத்திமூவர் உற்சவத்தில் ஸ்வாமி தரிசனம் செய்து கொண்டிருக்கும் பொழுது அறுபத்திமூன்று சிவனடியார்களுடைய விக்ரஹமும் எழுந்தருளிவந்த திருக்காட்சியைக் கண்ணுற்றிருக்கையில் காரைக்கால் அம்மையாருடைய திருவுருவம் கண்ணைக் கவர்ந்தது. அவருடைய விக்ரஹம் மற்றெல்லா விக்ரஹங்களிலும் விகாரமானது. ஏனெனில் அவர் ஒருவரே தம் அழகெலாம் அநுபவிக்கப் பிறந்தவனான கணவன் அவ்வனுபவத்துக் கஞ்சித் தன்னைத் துறந்தானென்பது கண்டு உலகில் தனக்கு உபயோகமில்லாத அழகை யெல்லாம் தம் பிறவாக் கணவனாகிய பதிக்கு அர்ப்பணம் செய்து தாம் பூததேகத்தோடு மட்டுமிருக்க வரம் பெற்றவர். ஆதலால், அவர் பூததேஹம் விகாரப்பட்டிருப்பினும் அவர் "திருவுருவம்" அதாவது அவருடைய "ஸ்வரூபம்" அழகு பொருந்த விளங்கியது. நல்ல மாம்பழம் தோல் சுருங்கி விகாரப்பட்டிருப்பினும் அதன் உள்ரஸம் சுவை மிகுந்து கனியின் சிலாக்கியத்தைக் காட்டுவது போல, காரைக்காலம்மையாருடைய திரை நிறைந்ததேகம் திரோதான சுத்தி யடைந்த அவரது திருவுருவத்தை அதாவது ஸ்வரூபத்தை ஞானசக்ஷுஸ் முன் தோன்றச் செய்தது.

மிஸ்மார்கரேட்நோப்ள் என்னும் பேர் புனைந்த அங்கிலேயமாது ஸ்வாமி விவேகானந்தரின் சிக்ஷைக்குள்பட்டு அவருடைய சிஷ்யையானபோது அவர் அந்த அம்மாளுடைய உள்ளப் பக்குவத்தை யுணர்ந்து "நிவேதிதை யம்மன்" என்று தீக்ஷா நாமம் கொடுத்தார். அப்பேர் பொருந்த அந்த அம்மணியும் தனது தீக்ஷா விருதம் தவறாது தனக்கு ஆத்ம தீக்ஷை கொடுத்த குருவே சரணாக அவருண்மையை யுணர்ந்து, உணர்ந்தபடி நடந்து, நடந்தபடி நட்டதைநாணமே ஒதிப் பேரும் புகழும் பெற்றதன்றி உள்ளத்துவகையால் மேன்மேலும் ஆத்ம சுத்தி பெற்றுவந்தார். இந்த அம்மணி சென்ற அக்டோபர்மீ டார்ஜீலிங்கில் தம் குருவோடு ஐக்கிய சித்தி பெற்றதைபுன்னி கல்கத்தாவில் சென்ற மாசம் ஷெரிப் மீட்டிங்கு ஒன்று கூடியது. அந்த மீட்டிங்கில் டாக்டர் ராஷ்பிஹாரி கோஸ் அக்கிராசனாதிபதியாக வீற்றிருந்து அவ்வம்மையின் உள்ளத் தழகைப்பற்றி உவந்து சிறப்பாய்ப் பேசினர். பாபு சுரேந்திரநாத் பானர்ஜியவர்களும் 'எம்பையர்' பத்திராசிரியராகிய மிஸ்டர் ப்ரேஸர் ப்ளேயர் அவர்களும், கனம் மிஸ்டர் கோக்கலே யவர்களும் அவருடைய உயர் நலம் பொருந்திய உண்மையான உயிர்வாழ்க்கையைப்பற்றிச் சிலாகித்துப் பேசினர்கள்.

மேற்றிசையாரில் ஸ்வாமி விவேகாநந்தருடைய சிஷ்ய கோடிகளான பல்லோரில், இவர் ஒருவரே உண்மையாகவிருந்து தம் தீக்ஷா விருதம் தவறாது நடந்து கொண்டவர். மற்றவர்களெல்லாம் ஆநந்தம் தேடி ஆநந்தப்பேர் புனைந்து தன்னைக் கொடுக்கமாட்டாமல் தள்ளாடி விழுந்தார்கள். நிவேதிதை யம்மன் ஒருவரே தன் உடல் பொருள் ஆவியையும் அர்ப்பணம் செய்து கொடுத்து மோகானந்தத்தை விட்டுத் தியாகானந்தத்தைப்பற்றி திவ்யதேஜோமயானந்தப் பிராப்தி பெற்றார்.

உண்மைக் குழைப்பவர் யாரும் திண்மையாளராயிருக்க வேண்டும். இந்தத் திண்மை கண்ணப்பனாருக்குப் பிறந்ததுமுத லிருந்ததினாலல்லவோ அவருக்குத் திண்ணனார் என்கிற திருநாமம் இயற் பெயராக வந்தமைந்தது. திண்மையுடையவர் திண்ணனார். திண்மை தேஹத்திரியங்களுக்கும் பொருந்தும். ஸ்தூலம் தடித்தவனுக்கு சூக்ஷ்மம் மெலிந்திருக்கும். சூக்ஷ்மம் தடித்தவனுக்குக் காரண சரீரம் வலி குறைந்திருக்கும். இது திரிகரண சுத்தியில்லாதவர்கள் விஷயத்தில் உண்மையாம். பூர்வ ஜன்ம புண்யத்தினாலும் தபோ மஹிமையினாலும் திரிகரண சுத்தி வாய்க்கப் பிறந்தவர்களுக்கு காரணசரீரம் வலி மிகுந்து திண்மையாகவிருக்கும். காரணத்தின் திண்மையினால் அதன் காரியமாகிய சூக்ஷ்மதேஹமும் திண்மை பெற்று விளங்கும். இப்படியாக அகத்தழகு பெற்றவர்கட்கு முகத்தழகு இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒன்றே. ஏனெனில் காரைக்கால் அம்மையாரைப்போல் தேஹாபிமானத்தை விட்டவர்களுக்குச் சரீர அழகு ஆபத்து விளைக்குமால், ஸ்தூல சரீரம் பூதாத்மகமாகவே யிருக்க விரும்புகிறவர்கள் பெரும்பாலாராவர். ஏனெனில் அவர்கள்.

"கனியே தேனே கற்கண்டே!
தனியேன் தரையில் தவிக்கலாமோ!

என்றபடி தரையிலிருந்து தவிக்கப் பொறுக்கார்.

ஓம் தத்ஸத்.

—:o:—

## The Depressed Classes Mission.

### The Depressed Classes—Cause and Cure.

"தாழ்ந்தகுலம் வாழத்
தாழா துழைக்குங் குழாம்"

—:-:—

### தாழ்ந்தவகுப்பார்—தாழ்வும் வாழ்வும்!

### முன்னுரை.

"வாழ்வான வாழ்வெனக்கு வந்ததடி வாழாமல்
தாழாமற் றாழ்ந்தேண்டி சற்றுங் குறையாமல்."

சென்ற ஏப்பிரல் மாதம் 15-உ திங்கட்கிழமையன்று சென்னை தாழ்ந்த வருப்பாரைச் சீர்தூக்கும் கைங்கரியம் மேற்கொண்ட சபையார் (Depressed Classes Mission) அவர்களது இரண்டாவது வருஷ மஹோற்சவங் கொண்டாட சென்னை கிறிஸ்தியன் காலேஜுக்குப் பக்கத்திலுள்ள அண்டர்ஸன் ஹாலில் ஒரு மஹாசபை கூடினார்கள். அச்சபைக்கு நிரந்தரமான தலைவர் கனம் மிஸ்டர் வி. சங்கரன் நாயர். அம்மகோற்சவங் கொண்டாடக் கூடின சபையில் அக்கிராசனம் வகிக்க உடன்பட்டவர் கனம். மிஸ்டர் அப்தர் ரஹிம். அப்பொழுது அச்சபையார் கருத்திற் கிசைந்து அனுதாப மிகுதியால் அவர்களோடு ஒத்துழைக்க உடன்பட்டு வருஷாந்த ரிபோர்ட்டு அங்கீகாரத்தைப் பற்றிப் பேச உடன்பட்டு வந்தவர் கனம் பிரஹ்ம ஸ்ரீ தி. ஸதாசிவய்யர். அண்டர்ஸன் ஹால் நிரம்பச் சென்னைமாவாசிகள் வந்து கூடியிருந்தார்கள். ஏழையேன் தேவி சொல்லைத் தட்டி "மார்ஜால புத்தியுள்ளவனை நம்பாதே" யென்று சொல்லிய எச்சரிக்கை யுணர்ந்தும், அனுபவ முதிர்விலாக் குறைவால் இன்றைக்கு ஆறு வருஷங்கள் முன்னே மார்ஜாலபுத்தியை நம்பிப்பொய் வலையில் சிக்கினேன். "மார்ஜாலி" என்றால் என்ன? பூனை. பகலிலும் இருளிலும் பார்க்கும் திறமை அதற்கே உரித்தாம். அஞ்ஞானத்திலிருந்துகொண்டே ஆசையொழியாது பாசம் நீங்காத, சுத்த எட்டுப்படிப்பின் சாமர்த்தியத்தால் சாஸ்திரங்களை யொருவாறு ஓதக்

கற்று மனத்தூய்மை யின்றி மருள்ஞானம் முற்றி இருளில் பார்க்கக் கற்றதனால் அருட்பார்வை வந்ததாக மயங்கி ஸாதுக்களைக் கூடிச் சதிபாதகம் செய்து கூடாநட்பால் குடிகெடுக்கும் தன்மையுடையார் யாராயினும் அவர் "மார்ஜாலபுத்தி"யுடையவராம். அப்படி யென்றால் மார்ஜாலி நியாயமாய் மாயாவித்தை சிறிது கற்று மனமாயை நீங்காது கனமாயையிற் பட்டுழலும் கர்மிகள் என்று பொருள்படும். இவர்களநேகரவை யுகந்தேற்றவர்களெல்லாம் "சதிரிழந்து கெட்டேனே" யென்று பாடியிருக்கிறார்கள். இதற்கு முக்கிய உதாரணம் பேசுகிறின்து நாதர். மற்ற எல்லாருக்கும் இந்த அனுபவம் பொதுவே! "மார்ஜாலி மாயவழி காட்டும்" என்பதன் கருத்தும் இதுவே.

"வார்த்தைத் திறமில்லா மனிதருக்குப் புன்சொல் [லாஞ்
சாத்திரங்கள் சொல்லிச் சதிரிழந்து கெட்டேனே!"

யெனப்பட்டினத்துபிள்ளை யவர்கள் பாடிய அனுபவம் ஏழைக்கும் உண்மையாய்ப்பலித்தது. பலித்தாலு மென்ன! சலிப்பு வராமல் உள்ளிருந்து உளங் காத்தவன் இணையடி பற்றினோர்க்குக் குறைவொன்றுமில்லை.

* * *

பட்டினத்தடிகள் ஊர்ப்பாழ் கடந்ததோர் உண்மைக் கோவிலில் கோவணாண்டியாகப் புறத்துறவு மேலிட்டு அகத்துறவு பூண்டு ஆனந்த ஸமாதியி லிருக்கையில், சில கள்வர் ஏதோ பொருள் கொள்ளை யடித்துவிட்டு, அதிற் சில நகைகளைக் கொணர்ந்து அடியாரிடம் கிடத்திவிட்டு அவரை அரசன் காவலாளர்க்குக் காட்டிக் கொடுத்துவிட்டுத் தாங்கள் பரமயோக்கியர்கள்போல வேடிக்கை பார்த்திருந்தார்கள். அந்த மஹாதபஸி மனதில் பேத மொன்றும் நினைக்காமல், அபேத ஞானம் தலையெடுக்க அபயாநந்த வாழ்வில் முழ்கியிருக்க, ஊர்க் காவலாளர்கள் திருடர்களைத் தேடிக்கொண்டுவர, அடியார் கோவணாண்டியாய் உள்ளம் ஒளிரக் கரியுரி போர்த்தான் தகைமையாய் அழுக்கடைந்த திருமேனியோடு அழுக்கறுத்த உள்ளம் ஒளிர வீற்றிருக்க, உளக்கண் பஞ்சடைந்த ஊர்க்காவலர்கள், திருடனைப் பிடிக்காத குற்றம் தமக்கிடையூறாக வந்தெய்துமென்று குருடனைக் கண்டோடிய திருடன் மனப்பாங்கே போல், அத்தூயவரைத் திருடனென்று பற்றி நியாயாதிபதியிடம் கொண்டுபோய் நிறுத்தினார்கள். நிறுத்தின பெரியவர் மௌனசமாதிபூண்டு "சும்மாவிருக்கச் சுகம் சுகம் என்றான்" சொல் நம்பி ஞானாநந்த ஸ்வரூபியாய் நிற்க, நடுவுநிலையறியா நியாயாதிபதியும் அப் பெரியவரை யாரோ பைத்தியக்காரனென்று நம்பி, திருடனைத் தூக்கில் போடுகிற விதிப்படி அவரைத் தூக்கிட்டுத் தண்டிக்க உத்தரவளித்தான்.

சாலவஞ்சனத்தால் காலனையும் வஞ்சித்த பெரியவர், தம் நிலைகுலையாது நிற்கக் காவலர்கள் அவரைப் பிடித்து கைக்கட்டு காற்கட்டுகள் கட்டிக் கொலைக்களம் கொண்டு போனார்கள். அங்கும் அவர் அமைதி கெடாது ஆனந்த மூர்த்தியாய் நிற்கச், செய்வன வெல்லாம் செய்தாயத்தமானபின் பட்டினத்தடிகளைத் தூக்குமரத்தின்மே லேறவேண்டித் தூண்டினார்கள். அந்த மஹானும் அத் தூக்குமரத்தைக் கண்விழித்துப் பார்க்க அது பட்டெனத் தீப்பட்டு நீறுயெரிந்தது. அரசன் இது கேட்டு ஓடோடியும் வந்து ஏதோ அபராதம் செய்துவிட்டோமென்று பயந்து பெரியவரைச் சரண் புகுந்து அபயங் கோறி நின்றான். பெரியவரும் அபயமுத்திரை யளித்து அவன் நட்பைவேண்டாது அயல் தேசம் சென்றார். அந்த அரசனது கூடாநட்பை யுன்னியே அவரும்,

"ஆசாரமில்லா அரசருடன் கூடிப்
பாசாங்குபேசிப் பதியிழந்து கெட்டேனே!"

என்று "இறந்த காலத் திரங்கல்" பாடியுள்ளார்.

* * *

இந்த அனுபவத்தை யுன்னி அன்று முற்பகலில் ஏழையேனைத் தோழமைபூண்டடுத்துக் கெடுத்த ஆகாத நட்பை விலக்கி, அஞ்சணுவும்

பெறாத பஞ்சமஹாபாதகமான வாக்கியத்தை அதன் சிறுமை கண்டொதுக்கிக் குலமழியக் கொடுத்தவ னுறவு தீர்த்து, நம்பினாற் கைவிடாத நாதன்தாள் பற்றி, அவனே கதியின்றி வேறொரு கதிகாணாது அக்ரம விக்ரம ஆர்ப்பாட்டத்துக் கடங்கியிருக்க,

"பற்றற்றார் பற்றாகப் பற்றி யிருந்தாண்டி
குற்ற மறுத்தாண்டி கூடி யிருந்தாண்டி"

யென்று பாடப்பெற்ற பண்புடையோன் விசுவநாதனாய் வடிவெடுத்து விசாலாக்ஷி யம்மையைச் சுட்டிக் காட்டி குலசேகரபட்டினத்தின் குறியும் சொல்லி, தாகவிடாய் தீர்த்துத் தாகமிகத் தணியவம்மா,

சகஜமாவிருந் தாண்டி.

"வெட்ட வெளியிலெனை மேவி யிருந்தாண்டி
பட்டப் பகலிலடி பார்த்திருந்தா ரெல்லாரும்!"
"செத்தாரை யொத்தேண்டி சிந்தை தெளிந்ததடி
மற்றொரு மில்லையடி மறுமாற்றங் காணேன்'டி."
இந்த நிலையிலம்மா திரிபுரமும் சுடுகொடாச்
சுற்றித் திரியலானேன் பற்றிலனா யெனைமறந்தே!
சிதையிலன்று தபஸிருந்தேன் சீர்குலைய வைத்தானென்று
பதைபதைக்கப் பாலனவன் மேல்விழுந்து அழுதானம்மா!
தாயிழந்த குழந்தையென்று தவிக்கவிடாதுடனிருந்தேன்
வாயிழந்த குழந்தையவன் வயிறெரியத் தவித்தானம்மா!
கோயில் குளம்வெட்டியவன் குடிபெரிதாய் வாழ்ந்தாலும்
வாயில் நலம் இல்லானவன் வயிறெரிய வினையிழைத்தான்!
அவன் செய்த கூத்துக்கெல்லாம் ஆளானேன் வினைவலியால்
இவன்செய்த கூத்தைக்கண்டு மனமழியக்காஷ்டமானேன்!
"சுட்டிறந்த பாழதனிற் சுகித்திருக்கச் சொன்னவன்காண்
எட்டிலெழுத்தோ எழுதினவன் கைப்பிழையோ!

* * *

"நீ விண்ட தெதுவானாலும் வெட்டவெளி யானாலும்
குடியிருந்த வீடதனைப்பாழதனா யாக்காதே!" —
யென்றுசொன்ன வென்தாயா ரின்றுவந் தெனைக்காக்கச்
சோமசுந்தரக்கடவுள் வாமமாக வந்தழைத்தார்.

"சும்மாவிருக்கவைத்தான் சூத்திரத்தை நானறியேன்
அம்மா பொருளிதென வுடைய விழுங்கினண்டி."
"பார்த்த விடமெல்லாம் பரமாகக் கண்டேண்டி
கோத்தநிலை குலைத்த கொள்கை யறியேண்டி."

இந்த நிலையிலே நான் எனையறியா திருக்கையிலே, பட்டப் பகலிலம்மா! பார்த்திருக்க வெல்லாரும், பிள்ளைமனம் நோகப் பேய்வழக்குத் தொட்டா னெல்லாம், பிள்ளைபறிகொடுத்த பாவியவன் தேவிசள்ளன்; சொல்வழக்குப் பலியாமே சூநியமாய்ப் போனான்காண். குழந்தை மனந்தேறப், பழுத்தமனம் நழுவிவிழ, விசுவநாதரூபியவன், காசியிலேவீற்றிருப்பான், குலசேகரத் தம்மையுடன் கூடியிருப்பானவன்,: குழந்தையை மடியில்வைத்து குணம்பலவாப் பேசியம்மா, "கோர்ட்டாருன்றன் உயர்தந்தையைக் குணக்கேடன் என்னத்தகார்: குணக்கேடுன்னிடமணுகில் உனைப்பெற்றான் கெடுவனாவான்!" என்றுமாசொல்லியம்மா ஹிதோபதேசம்செய்ய உள்ளங்குழைந்துபாலன், உளமுருக மருகிநின்றான்.

மனந்தேறிப் பின்னையம்மா மாண்புடனே கூடிவர, ஸோமசுந்தர மூர்த்தியவன் சுட்டியென்னை யழைத்தானம்மா!

"தாழ்ந்தகுலம் வாழுவென்று தாழாதுழைக்கும் குழாம்," மஹோற்சவங் கொண்டாடக் கூடியுள்ளோம் நாங்களிங்கே! கூடிக்குலாவி நீயும் கோத்தநிலை குலையாமல், சேர்ந்திருந்து கொண்டாட்டம் செய்ய வேண்டுமென்று சொன்னான்.

"பாழான பட்டணத்தில் 'பழமை' கெட்ட லக்ஷணத்தில் பொதுக்கூட்டம் கூடி நீங்கள் ஏதுசெய்யப் போகுறீர்கள்?" என்றுரைத்தே மனம் விண்டேன் ஏது செய்வதென்றறியேன்!

* * *

கொன்றபிள்ளை யெழுந்திருக்கக் கூவியழைத்தானவன், கொன்றைமாலைசூடியவன், மன்றிலாடுமாதவன்காண்! பன்றியாக விருந்தி

முன்னே குட்டிகளைக் காத்தானம்மா! என்ன ஜாலம் செய்பவென்றோ எனையழைத்தான் நானறியேன்.

* * *

திரயோதசி யன்றம்மா, ப்ரதோஷகாலமம்மா, த்ரிமூர்த்திகள் அவதாரம் ஆகிவந்தாற்போலவம்மா! மன்னன் மனச்சாக்ஷிகாக்கும் கனமான ஜட்ஜ் மூவர், இனமாக வந்தங்கே எழில் மேசலை தந்தாரம்மா!

* * *

கூட விருந்தேன்நான் குதூஹலம் ஒன்றுங் காணேன். அப்தர்ரஹிம் உண்மையாளர் அக்கிராஸனம் வகித்தார். சங்கரனே வந்தாற்போல் சங்கரன் நாயரவர், தாழ்குலம் வாழவென்று தனியுழைப்பார் தலைவரானார். மனோன்மணி பாகனங்கே மகிழ்ந்தருளி வந்தாற்போல், ஸதாசிவ மூர்த்தியம்மா, ஸஜ்ஜனரைக் காப்பவன் காண், தாழ்குலம் விளங்கவென்று தாழாமற் பேசினான்காண்! தாழ்குலத்தார் சீர்பெறவே வெள்ளிப் பதக்கமொன்று விநயமாயளிப்பே னென்றான்: எழில்பெருஞ்சபையாரெல்லாம் கழிபெருங்களிப்புக் கொண்டார். உள்ளத் துணர்வம்மா ஊறினது கண்டேழை, "வாழ்வான வாழ்வெனக்கு" வந்தமுறை தான் கண்டு "தாழ்ந்தகுலம் வாழவென்று தாழாமலுழைப்பார் முன்னம்" "தாழாமல் நான் தாழ்ந்துநிற்கத்" தயவு செய்ய வேண்டுமென்றேன்.

* * *

உள்ளத்துணர்வை நான் உண்மையாய்க் குறித்து வைத்தேன். கள்ளமேதும் நினைத்தேனில்லை கருணாகரன் சாக்ஷி! உள்ளமுணர்ந்தே—"உண்மை யுரைத்தலோடு கேட்டல் நலம்," என்றுரைப்பார் சொற்கிணங்கி, எனைப் பேச வழைத்தாரம்மா!

* * *

"தாழ்ந்த குலம் வாழவென்று தாழாதுழைக்குங் குழாம்" கூடுசபை முன்னே நான் தலைநிமிர்ந்து குனிந்து நின்[illegible]ர். "தாழ்ந்த குலம் வாழவைக்கும் தயாபரன் நயவாலே தாழ்ந்த குலத்தவனைத் தங்கள் முன்னே நிற்கிறேன் காண்!"—

என்றுரை சொல்லியம்மா 'எதிரொலிசெய் கரகோஷம், ஆர்ப்பரித்தடங்குமுன்னே, அடியன்நான் சொன்னதைக்கேள்:—"தாழ்ந்த குலத்தாரவர் தரையில்படுந்துன்பமெல்லாம் அறுவருஷமனுபவித்தே ஆற்றலுடையனானேன்! வாயில்லாச் சீவன்களாய் ஏழைகள் வருந்துறார்கள். வாயுள்ள ஜீவனல்லோ மன்குலத்திற் பிறந்தவர்கள்! துன்பம் தரையிலுண்டு: தூய்மை மனத்திலுண்டு. தூயமனமுண்டானால் துன்பமெல்லா மின்பமாகும். ஏழைகளைப் படுத்துகின்ற பாவிகள் பாவமெல்லாம், ஏழைமனம் கோழைப்பட்டால் வாழை மரம் போலாகும்! வாழையடிவாழியாத் துன்பம் வளருமம்மா! துக்கமும் அதிகரிக்கும்! கோழைமனம் தெளியவென்றே குணக்கேடு வாராமல், ஏழைகளைக் காக்கவேண்டும், ஈசன் செயல் இதுவே காண்! 'ஏழை யழுத கண்ணீர் கூறியவாளொடொக்கும்'' என்று சொன்ன வார்த்தையுமே பொய்யல்ல காண்பீர்கள். பொய்யல்ல மெய்சொன்னேன் மெய்யன்பு பூண்டு பார்ப்பீர். ஏழை மனம் விரியாமல் கோழைப்படச் செய்வதனால், தாழ்மை வந்து வாழ்வையெல்லாம் கெடுக்குதையா சொன்னேன் கேளீர்! உணர்வையழித்துவிட்டு ஊணளிக்கும் தர்மமெல்லாம் உயிர்போன வுடலுக்குச் செய்யுமுபசாரம்போலாம்!

"மன் குலத்தார் படுந்துன்பம் மனத்தூய்மையுண்டானால், உயிர்வாங்கும் கோடரியும் ஊர்காக்கும் செங்கோலாம்! சிதக்னிகுண்டத்தீயால் கரும்பொன்னும் செம்பொன்னாம். செம்பொன்னைப் புடம்போட்டால் பசும்பொன்னாம் மூலிகையால். அதுபோலவே, சபையீர் ஆருயிரை வதைக்குமிந்த அருந்துயரமெல்லாமும், ஒங்கார மூலிகையால், உயர்பொன்னாய், மணியாகும். சிந்தாமணி யுண்டானால்

சிறப்பெல்லாம் வந்தெய்தும். குன்றாத வாழ்வுமப்போ குறைவிலா தெய்துமையே!

"உயர்குலமேயானாலும் உண்மை கெட்ட மானிடர்கள், தமையடுத்தார் பிழைக்கவென்று தரணியிலே யவதரித்து ஏழைமனங்கொண்டவரை இருமாப்பால் வதைக்கலாகார். உள்ளத்திலுணர்ந்ததுவே யுலகிலுங்காணலாகும். ஏழைகளை வதைப்பதாலே எழில்புரம்பாழாகும். கோழைமனம் விருத்தியானால் குடிகேடு வந்துவிடும்! ஆகையினாலே அறிவுடையீர் எல்லாரும் ஏழைமனம் நோவாமல் காக்கவேண்டும் இது தர்மம்.

"ஏழைகளுக் கன்னம் இடுகிறோம் என்கிறார்கள். மேழைச் செல்வம் கோழை படாதல்லோ! உழுதுண்டு வாழ்வானுக் கொப்பில்லை நாமெல்லாம். பெண்டீர் மனம் நோகப்படுத்துகிறோம் அவர்களை நாம். பயனென்ன கண்டீரோ? பாழானோம் நாமெல்லாம்! ஊருக் குழைக்கும் உத்தமரைக் காணோம்! நாட்டுக் குழைக்கும் நல்லாரை நாம் காணோம்! தர்மத்தைக் காக்கும் தபஸிகள் எங்கே போனார்! கர்மத்தைச் செய்யும் கடையர்களே மிகுதியானார். சோற்றுப்படிப்பினால் சுகமுண்டோ சொல்லுவீர் நீர்? பட்டாடை தானுடுத்துப்பகட்டாக வெளிப்போனால் எட்டாத செல்வம்நமக்கென்னமாக வந்தெய்தும்! தாழ்ந்தகுலம் வாழவேண்டில் அறியாமை யழியவேண்டும்! காசாசைகொண்டவர்கள் கொட்டம் அடங்கவேண்டும். நாடெல்லாம்வாழக் கேடொன்று மில்லையென்பார். அந்தப் பழமொழியும் அடியோடே போய்விட்டது! கோயிலைத் தானிடித்து குடிலம் சமைக்கலாமோ! ஜனசமஷ்டி வாழாமல் வியஷ்டி ஜீவன் வாழலாமோ!

"ஏழைகள் தாழ்ந்ததெல்லாம் கோழை மனத்தாலென்பேன்! இங்கிவனைப்பாருங்கள், எப்படி யிருக்கிறான்காண்! தாழாமற்றாழ்ந்து தவவேடம் பூண்டேனான்! வேடங்கலையாமல் வீண்காலம் போக்காமல், உண்மையாயிருந்துநான் உள்ளத்தைச் செப்பனிட்டதனால், "வாழ்வான வாழ்வெனக்கு வாழாமல் வந்தது காண்!" கள்வனிவனென்றும் கடையனிவனென்றும் காசாற் பெரியவர்கள் கைப்பாலேயுரைத்தாலும், கள்ளங் கபடென்னகத்தே சிறிதுமில்லை சாக்ஷி நிற்பீர். இப்படியே ஏழைகளை எட்டியடித்தாக்கால் கோழைமனம் செய்கூத்தால் குடிகேடு வந்துவிடும்! ஆகையினாலே அறிவுடையீர்! சொல்லக்கேளும்! "தானே தனக்குப் பகையும் நட்டானும்!" உயர்வும் தாழ்வும் உள்ளத்திலே காணவேண்டும். காசாற் பெரியவர்கள் கடைமையிலே சிறியவர்கள் உயர்பதவி பெற்றாலும் அவர் சிறுதனம் போகாது. உளத்திற் பெரியவர்கள் உண்மையிற்சிறந்தவர்கள் பறச்சேரியிற் பிறந்தாலும் பண்புடையாராவார்கள். நந்தனே யிதற்கு நல்லுதாரணமாவார். ஊரெல்லாமஞ்ச உயர்பதவி பெற்றாலும் உள்ளத்தில் பஞ்சையாவார் மன்பதரேயாவார்கள்! உண்மை யிது சொன்னேன், உளமகழ்ந்து கண்டு கொள்வீர்!

தடையற்றவாழ்வாலேதாழ்வொன்றும்வாராது
மடையற்றபுனலோடிக்கடலிற்போய்விழுமாபோல்
தடையற்றமனப்பழக்கம்தடைக்கஞ்சித்தாழாது!
தடையஞ்சாஅபயவாழ்வால்தாழாமற்றாழலாகும்!

தாழாமல் தாழக்கற்றால் தாழ்ந்தகுலம் வாழலாகும். சற்சபையாரே! சிற்சபைசரணம்!"

ஓம்தத்ஸத்.

———(:o:)———

## The Tamil: Its origin and growth.

## தமிழ்மொழி யோகக்ஷேமம்.

———:❋:———

இவ்வுலகமே துவந்தாகாரமாக வுள்ளது. துவந்துவம் ஒழிந்தால் தத்துவம் மிஞ்சும். 'நீ நீ' யென்பது போனால் "அதுநீ" யென்பது மிஞ்சும். அது என்பது அனாதியாயுள்ளது. நீயென்பதும் அனாதியும் ஆதியும் சேர்ந்துண்டானது. அனாதியை மறந்தால் துவம்பதம் ஆதி முதல் அந்தம் வரையிலோடும். ஆதி போடந்தமா யனைத்தையு முணர்ந்தபின் ஆதியை விட்டனாதியைத் தேடும். ஆதியை அறி

ந்து அநாதியைத் தேடுவதே தத்துவம். ஆதியில் அநாதியை யறிதல் ஞானம். ஆதி யநாதியிரண்டு மொன்று யுணர்ந்திருத்தல் யோகம். "அப்ராப்த ப்ராபணம் யோக:" கிடைக்கப் பெறாத பொருளைக் கிடைக்கப் பெறுவது யோகம். கிடைத்ததைக் காப்பாற்றுவது க்ஷேமம். ஞானமின்றி யோகம் சித்திக்காது. யோகமின்றி பக்தி பழுக்காது. பக்தி பழுத்தால் மனம் தானே நழுவி விழும். அதனால் முத்தி சித்தியாகிய பேற்றுபேறு சித்திக்கும். இங்கே ஞானம் என்றது அறிவு; யோகம் என்றது ஞானாப்பியாஸம்: (மனப்பழக்கம்.) அறிவதானாயிருந்து பழகுதல்யோகம். அறிவுதானாகி அறிவின்றி வேறிலாதாதல் யோக சித்தி. இதைத் தமிழ்மொழிக்குப் பொருந்தப் பொருந்திப் பார்ப்போம்.

தமிழ்மொழி யென்றால் இனியமொழி. மொழி = வாக்கு. அநாதியிலிருந்து ஆதியும், ஆதியிலிருந்து நாதமும், நாதத்திலிருந்து சத்தமும் (ஓசையும்), ஓசையிலிருந்து இசையும் (ஸ்வரமும்), இசையிலிருந்து எழுத்தும், எழுத்திலிருந்து வழக்கும், வழக்கிலிருந்து பதமும் (வார்த்தையும்), பதத்திலிருந்து மொழியும் (வாச்சியமும்) வாச்சியத்திலிருந்து நூலுமாக இப்படி விரியும்.

இலக்கியங் கண்டதற் கிலக்கண மியம்புவர் புலவனார் என்பர். இலக்ஷியமெதுவோ அதைச் சாக்ஷாத்காரமாக நேர்நேராக (திரிபுடிமயக்கந் தீர)க் கண்டு, அப்படிக் கண்டது விலக்ஷணமாயினும், அதில் ஆழ்ந்திருந்து அது விரியும் வகையுணர்ந்து இலக்கணம் கூறுவோர் புலவனார் என்று சொல்லப்படுவர்.

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்."

என்றிருப்பதால் கற்றதற் கழகு கடவுளை வணங்கப் பெறுதல், "கற்றதோர் கல்வியும் மனப் பழக்கம்"—என்றார் ஔவையார். ஆகையால் சித்தவிருத்தி நிரோதமாகிய மனப்பழக்க மில்லாதவர் கற்றகல்வி உண்மையான மனப்பழக்க மில்லாத குறைவால் கல்வி யென்னும் இலக்கியத்துக் கொத்ததாகாது.

அகத்தியனார் பேரகத்தியம் இப்படியே கூறுகின்றது.

"இலக்கிய மின்றி இலக்கண மின்றே
எள்ளின் றாகில் எண்ணெயு மின்றே
எள்ளினின் றெண்ணெ யெடுப்பது போல
இலக்கியத்தி னின் றெடுபடும் இலக்கணம்."

உள்ளத்தி னுள்ளே யுணரும் இலக்ஷியப்பொருளில்லாவிட்டால் இலக்ஷணம் எங்கேயிருந்து வரும்? எள்ளில்லாமல் எண்ணெய் எப்படி யுண்டாகும்? எள்ளிலிருந்தே எண்ணெயெடுப்பது போல, இலக்ஷியப் பொருளிலிருந்தே இலக்கணம் எடுபடும். ஆகவே தமிழ்மொழி யாராய்ச்சி செய்வோர், முதல்முதல் மொழியை அறிந்தாய வேண்டும். மொழியின் இலக்கிய மறிந்தால் அது வடமொழி, தென்மொழி யென்ற பிரிவு பட்டதின் இலக்கணம் தானே விளங்கும்.

மொழி யெல்லாம் பிரணவப் பொருளிலிருந்துண்டாயது. பிரணவமோ இறைவனார் அகப்பொருள். இறைவனை யறியாதார் இறைவனார் அகப்பொருளை யறியார். எள்ளறியாதார் எள்ளகத்தேயுள்ள எண்ணெயறியார்போலும். இறைவனார் சகுணரூபி. அவரது அகப்பொருள் நிர்க்குணமானது. சகுண நிர்க்குண ஸ்வரூபமறியார் பிரணவத்தை யறியார். "ஓசைக்குள்ளுறும் ஓம்பொருளே, வேசைக்கு ஞானனுருவேர்ப்புழுவே" யென்றார் பெரியோர்.

ஓசைக்குள் நிர்மலாகாரமாயிருக்கும் பிரணவப் பொருள்தானே, வாக்கு வியபசாரம் செய்கிறவர்களுக்குள் வாக்குக்கு மூலமாகிய சங்கல்ப சக்தியைப் புழுவாய் அரித்து வாக்சித்தியைக் கொடுக்காது நாசம் செய்யும். ஆதலால் வாக்கு ஆதியில் ஒன்றேயாகும். அதுதான் பரைவாக்கு. தேவியின் கரத்தி லுட்கார்ந்திருக்கும் கிளி அப்பரைவாக்கின் உருவகமாம்.

பரை, பச்யந்தி, மத்யமை, வைகரி யென்கிற வாக்கின் விரிவை உள்ளபடி யுளவறிந்து கண்

டவர்கள் வாக்கின் இலக்கியம் கண்டவராவார். இவர்களுக்கு வாக்கிலக்ஷணம் தானே ஸித்திக்கும். வாக்கின் இலக்கியம் கண்டதற் கிலக்கணமானது வாக்குசித்தி, இந்த வாக்குசித்தி இதய சுத்தியில்லாமல் பலிக்காது. "வாய்மையால் அகம் தூய்மையாம்" என்றிருப்பதால், ஸத்தியவாக்கு யாரிட மிருக்கின்றதோ அவர்களிடமே வாக்குஸித்தி யுண்டாம். ஸத்ய விருதத்தால் இதய சுத்தி, வாக்ஸித்தி பலித்தாலும், கர்ம சரீரமுள்ள வரையில் தர்மத்தின் மர்மமறிந்து தர்மவழிபற்றி நின்றாலன்றி பிராகிருதாத்மகமாகிய கர்ம முடிச்சை யவிழ்த்து வெல்ல முடியாது. ஆகையால் "ஸத்யம்வத :தர்மம்சர" என்று வேதம் முறையிடலாயிற்று.

இப்படி ஸத்ய விருதத்தோடு தர்மானுசாரமும் சேர்ந்து வந்தால், வாக்கு ஸித்தியோடு கர்மஸித்தியும், கர்மஸித்தியால் தர்மஸித்தியும், தர்மஸித்தியால் நைஷ்கர்ம ஸித்தியும் பலிக்கும். நைஷ்கர்மஸித்தி பெற்றால் அவனே ராஜா. ஏனெனில் கர்மபந்தம் அவனைக் கட்டாது. "மனிதருள் நான் ராஜாவாயிருக்கிறேன்" என்று பகவான் அர்ச்சுனனுக்குச் சொன்னதினுள்ளர்த்தமும் இதுவே. மனிதருக்குள் நைஷ்கர்மஸித்தி பெற்றவனாயிருக்கிறேன் என்பது ஒன்றே உண்மையான இலக்கியப்பொருள். இந்த இலக்கியத்துக் கிலக்கணமா யிருப்பவரே உலகில் அரசுரிமைக் குரியவராவார். மற்றவர் அரசுரிமை பெற்றால் கொடுமை புரிவராவர். இதுவே இலக்கிய இலக்கண விசேஷமாம். தமிழ்மொழிக் கிலக்கியமானார் பரமசிவன். இவர் மொழிக் கிருப்பிடமா யுள்ளவர். மன, மொழி, மெய் என்கிற மூன்று காரணங்களில், மனம் ப்ரஜ்ஞானத்திலும், மொழி பிரணவத்திலும், மெய் (உடல்) பிராண சக்தியிலும் ஒடுங்கும்.

பிரணவஞானம், பிரணவமந்திரம், பிராண சக்தி யென்கிற மூன்றும் அகார, உகார, மகாரங்களிலடங்கி நிற்கும். இறைவன் அகாரம், தேவி உகாரம், ஊமைப் பிள்ளையாம் குமரன் மகாரம்.

ஆகவே அகஸ்தியர் குமரக்கடவுளிட மிருந்து தமிழ்மொழியைப் பெற்றார். தன்னை வேண்டிய அகஸ்தியனாருக்கு முருகக் கடவுள் "ஓரிடத்தைச் சுட்டி—'அதை யெடுக்க' என்றார்" என்றதனால் அது "முன்னமே சேமத்தில் இருந்தது என்பார்" உள்ளாய்ந் துணரவேண்டிய தென்னெனின் மகார மாத்ராத்மனான (ஊமைப் பிள்ளையாம்) குமரக் கடவுள், தமது அன்னை யப்பனைச் சுட்டிக்காட்டி, மொழிக் கெல்லாம் காரணமாகிய அந்த இடத்திலிருந்து (க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞ விபாகத்தால் அதை யெடுக்க வென்றார் என்பது பொருளன்றி தேசகால பரிச்சேதங்களுக் குள்ளான ஓரிடத்தில் அதைச் சேமித்துவைத்துக் காட்டினாரென்பது பொருளல்ல. அது காலவஞ்சன ரஹஸிய மறியாதார் கால சக்ரத்தின் சுழற்சி யுணராது மாயை மயக்கிலாழ்ந்து சரித்திராராய்ச்சி மாத்திரத்தால் இட்டுக்கட்டிச் சொல்லும் ஓர் யுக்தி சாமர்த்தியமேயன்றி "இலக்கியங்கண்டதற் கிலக்கண" மாகாது.

அகத்தியனார் அம்மொழியைப் பெற்றுத் தமிழ் மொழிக்கிறைவனானார். உலோபா முத்திரையும் தாயவளானாள். தமிழ் தானும் சித்தனாய்ப் பிறந்தது. இறைவனும் தேவியுமொன்றாகக் குமரக்கடவுள் பிறந்து, "ஞானமென்பது மோனவரம்பு" என்பதற் கிலக்கியமாய் "ஊமைப்பிள்ளை" யாயிருந்து சங்கத்தார் சங்கை தீர்த்தருளியது போல, அகஸ்தியரும் லோபாமுத்ரையும் ஒன்றாக சித்தவாக்காம் தமிழ்மொழி பிறந்தது. அதுவே "சித்தன்" பிறந்த இலக்ஷணத்துக்கு இலக்ஷியம்.

இப்படியாகப் பொருளும் பதமும், இசையும் குரலும்போல் இனிதிற் பொருந்தி வளர்ந்தது தமிழ்மொழி, அதைப் பரிபாலித்தார் அகஸ்தியர். பிள்ளைப்பேறு பெற்றார் பரிபாலிக்கும் கடமை பெற்றாரன்றோ!

ஓம் தத்ஸத்.

## On the Use & abuse of Power & Pelf.

—(:o:)—

தங்கச்செருப்பு தலைமேலே!
பதமிட்டசெருப்பு பாதத்திலே,

"பணமென்றால் பிணமும் வாயைத்திறக்கு" மென்பர். இது ஓர் பழமொழி. உலகத்திலே பணத்தினுடைய மஹிமையையும் பணவாசையினுடைய வல்லமையையும் காட்டவேற்பட்ட பழமொழியிது. ஆனால் எதற்கும் விநியோசம் துர்விநியோகம் என இரண்டு உபயோகிக்கும் வழியுண்டு. விநியோகமென்பது நல்வழியிலுபயோகிப்பது. துர்விநியோக மென்பது தீவழியிலுபயோகிப்பது. பணம் பெரிதென்று தங்கத்தாலே செருப்புச்செய்து கொண்டால், அந்தச்செருப்புக் காலில் போட்டுக்கொண்டு நடமாட வுதவாது. தங்கச் செருப்பென்று அதைத் தலைமேல் தூக்கி வைத்துக்கொண்டு போகிறவன், தனக்குள் அதை என்னதான் பெரிதாக மதிப்பினும், பார்ப்பவர்க்கு அவன் செய்கை சிறிதும் மதிப்பாயிராது: செருப்பைச் சுமந்துகொண்டு போகிறவன் என்று தான் அவர்கள் இழிவாய் நினைப்பார்கள். தோலைப் பதமிட்டுச் செருப்புத் தைத்தால் அது காலில் போட்டுக்கொள்ள உதவும். பதமிடாத தோல் செருப்பு காலில்போட உதவாது.

ஆதலால் பதமிட்ட தோலால் செருப்புச் செய்து பாதத்திலே போட்டுக் கொள்ளுவதற்கு பதிலாக, ஒருவன் தன்னிடம் பணம் பெரிதுமிருக்கிறதென்று தங்கத்தால் செருப்புச்செய்து அதைத் தலைமேல் சுமந்துகொண்டு போவானானால், உலகம் அவனைப் புத்திகெட்டவனென்றே பழிக்கும். அதுபோல நல்ல பிள்ளையைப் பெற்றால் சுகிர்தமுண்டு, நல்ல குலத்தில் பிறந்தால் நற்குணந்தானே வந்தெய்தும். தீய குலத்தில் பிறந்தால் தீக்குணம் வந்தெய்தும். ஆகையால் பிறவிக்குணம் பிறப்பளவே யாமென்பர். ஆகையால் தான், "குலத்தைப் பார்த்துப் பெண்ணைக் கொடு: கோத்திரத்தைப் பார்த்துப் பெண்ணைக்கொள்," என்கிற பழமொழி யேற்பட்டது. நற்குலத்திற் பிறந்த பிள்ளைக்கே பெண்ணைக்கொடுக்க வேண்டும். எவ்வளவு படித்தவனா யிருந்தாலும், என்னதான் உத்தியோகம் செய்பவனா யிருந்தாலும், அவன் வெளி மினுக்கையும் காசையும் பணத்தையும் பார்த்துப் பெண்ணைக் கொடுத்துவிடக்கூடாது. ஏனெனில் "குலத்தளவே யாகும் குணம்." "சுட்டாலும் சங்கு தன் நிற மாறாது"போல், துன்பங்கள் வந்த விடத்தும் நற்குடிப் பிறப்பினரது நல்லகுணம் மாறாது. "கலக்கினும் தண் கடல் சேறாகாது"போல், பெரிய மனதுடையவர்கள் என்ன மனக்கிலேசம் வரினும் இழிவுடையராக நடந்துகொள்ள மாட்டார்கள். இழிகுலத்திற் பிறந்தவர்களோ அவர்களுடைய இழிகுணம் மாறாதவராகி அற்ப வாழ்வில் செய்த அழிபாதகங்களை யெல்லாம், பணத்தாற் பெருவாழ்வு பெற்ற விடத்தும் செய்து எல்லாரையும் நடுங்கச் செய்வார்கள்! தேளுக்குமணியம் கொடுத்ததுபோல் துஷ்டர்களுக்கு வாழ்வு வந்தால் அவர்கள் துராத்மாக்களாய்த் துன்பமே யிழைத்து வருவார்கள். ஆதலால், அற்பனுக்கு வாழ்வு வந்தால் அது ஆபத்தே விளைப்பதாகும்.

தர்மவிதியும் அற்பனுக்கு வாழ்வு வந்தால் அது மேன் மேலும் விருத்தியாகும்படி யமைந்திருக்கிறது. ஏனெனில் தங்கச் செருப்பென்று தலையிலே தூக்கி வைத்துக் கொள்கிறவன், இடம், பொருள், ஏவலறிந்து எதையும் செய்ய மாட்டான். தன்னிடத்திலுள்ள பணத்தை ஸத் விஷயத்தில் விநியோசப்படுத்தத் தெரியாமல், துர்விஷயத்தில் துர்க்கிருத்தியம் செய்யவென்றே அதை துர்விநியோகப்படுத்திவருவான். இது அவனுக்கும் உலகுக்கும பெருங்கேட்டை விளைக்கும். தீவினை விதைத்தால் தீவினை விளையுமாதலால், அவன் செய்யும் துஷ்கிருத்தியங்களெல்லாம் ஒன்று பத்தாக வளர்ந்து வினையை வளர்த்துத் தீவினைப் பயன் அதி

கரிக்கும்படி செய்யும். இதனால் அவனுக்குப் பெருங்கேடு விளையுமென்றார்.

உலகத்தார் மௌட்டிய திசையில் பணவாசை பிடித்தவர்களாதலால் இவன் பணத்துக்கு ஆசைப்பட்டுக் கொண்டு இவன் காட்டும் கெடுவழியில் பிரவேசித்துத் தமக்கும் பிறர்க்கும் கேடிழைப்பாராவர். இதனால் உலகில் அதர்மம் ஓங்கும். தர்மம் தலைசாயும். வர்மம் அதிகரிக்கும். இதனால் ஏழைமன முடையவர்கள் மிகவருந்தக் கோழைமன முடையவரால் கெடுதி மிகவும் சம்பவிக்கும். "மனப்பழக்கம்' என்கிற "சித்தவிருத்தி நிரோத அப்பியாஸத்தால்" மனந்தேர்ந்து பழகினவர்கள் வந்த வில்லங்கங்களை விலக்கியும் விலக்க முடியாதவைகளை வினைப்பயனாய் வந்தன வென்றனுபவித்தும் தீர்ப்பர். கோழைமன முடையாரோ மனங்கொதித்துத் தீயவை தாங்க மாட்டாமல், உள்ளம் வெதும்பிக் கள்ளம் நினைப்பார்கள். ஐயோ! அவர்கள் அப்படி தங்களை யறியாமல், படுதுயர் தாங்காது கள்ளம் நினைக்கக் கருதினாகில், வந்ததுகேடு! இப்படி ஏழைகளை வருத்துகிறவர்கள் மஹா பாவிகளாவார்கள். ஏனெனில் அவர்கள் தம் தீவினையால் தாமேயன்றித் தம்மை யடுத்தாரையும் கெடுத்து, அரசனது செங்கோலும் கோணும்படி செய்வார்கள். ஆதலால் இவர்கள் உண்மையில் இராஜத் துரோகிகளாவார்கள்.

மநுநீதிகண்ட சோழன் கதையில், பசுவொன்று தன் கன்றிழந்துபோக அரண்மனை வாயிலிற் சென்று ஆராய்ச்சி மணியைக் கொம்பால் அடிக்க, அரசன் ஓடோடியும் வந்து, விளைந்ததை வினவி, உண்மையை யோர்ந்தறிந்து, தர்மந் தலை கவிழாதபடி தன் ஏகபுத்திரனைத் தேர்க்காலில் வைத்துப் பசுவின் கன்றைக் கொன்றதுபோல் அவனது இன்னுயிர் துடிக்கத் தேரை யவன்மேல் விட்டோட்ட, தீவினைப்பயன் கழிந்த புண்ணியத்தால் 'இருவினை யொப்பு'ண்டாகி அந்த அவசரத்தில் பகவான் தோன்றி மாண்டவர்களுக்குப் பின்னுமுயிர்ப் பிச்சையளித்து தர்மந் தழைக்கத் திருவருள் சுரந்தருளலானார். இதுதான் செங்கோல் லக்ஷணம்.

## The Late Dewan Bahadur R. Raghunatha Row, C. S. I.

## திவான் பகதூர் ஆர். ரெகுநாதராவ் காலகதியானார்.

"நஞ்சுக்குள் இருந்தாலும் நாகமணி மாணிக்கமே, குப்பையிற் கிடந்தாலும் குந்துமணி குந்துமணியே" யென்னும் உலக வழக்கமாய் வழங்கும் பழமொழிக் கிணங்க பழுத்த தேசாபிமானியும் தீர்ந்த அனுபவசாலியும், திருக்குடந்தைவாஸியுமான திவான் பகதூர் ஆர். ரெகுநாதராயரவர்கள் 1912-ம் ௵ மே மீ 2உ வியாழக்கிழமை யிரவு ஒருமணி சுமாருக்கு கும்பகோணத்திலுள்ள தம் வாசஸ்தானத்தில் இம்மாயப் பிரபஞ்சத்தை விட்டு விலகின இந்தத் துக்ககரமான செய்தியை இன்று எழுத வேண்டி வந்ததே யென்று மனம் வெதும்பி, முகம்வாடி, மெய்சோர்ந்து நிற்கின்றோம். சமீபத்தில் நடந்தேறிய சென்னைச் சட்டநிரூபண சபை மீட்டிங்குக்கு விஜயம் செய்து கும்பகோணம் சென்றார். அது முதல் அவருக்குத் தேகம் அஸௌக்கியமாகவே யிருந்தது, எனினும் இவ்வளவு சீக்கிரத்தில் இவரை நம்மத்தியிலிருந்து மறலியானவன் (யமன்) கொண்டு செல்வனென்று நாம் எண்ணவேயில்லை. தேக அஸௌகரியத்துடன் அவர் அதிகநாள் வருந்தினதாகவும் தெரியவில்லை. வயது முதிர்ந்த வார்த்தியாதலின் பொதுவாயிருக்கக் கூடிய சரீர அசக்தமென்று எல்லோரும் எண்ணியிருந்தார்களே யன்றி திடீரென்று அம்மகான் கண்மூடி விடுவாரென்று எவரும் எதிர் பார்க்கவில்லை. இறப்பதற்கு முன் தினத்திலிருந்து

அவருக்கு ஆகாரம் அணுவளவும் செல்லாததனாலே மட்டும், 'காலாந்தகன் கடுகென வருவதன் அடையாளமோ இது' என்று சொல்லும்படியாயு மிருந்ததாம். இவரைப்போல் பெருந்தன்மையோடு லோகோபகாரார்த்தமாயும், கௌரவமாயும் தென்னிந்தியாவிற் காலந்தள்ளினோரைக் காண்பதரிது. தேசபக்தியும் ராஜபக்தியும் கொண்ட புருஷோத்தமராவர் ராயரவர்கள். சுறுசுறுப்புடன் உழைக்கும் உத்தம சிலர், சோம்பலென்பதைச் சிறிதும் உணராத சம்பன்னராவர். இத்தகைய குணவானை யிழந்ததனாலே தென்னிந்தியாவிற் பிரகாசித்துக் கொண்டிருந்த திலகமொன்றை நாம் இழக்கும் தௌர்ப்பாக்கியஸ்தராயினோம் என்றே சொல்லவேண்டி வருகிறது.

மகாராஷ்ட்ரத் தலைவராயிருந்த மகா பிரக்யாதி யடைந்து விளங்கியவர் சிவாஜி. இவரது சகோதரர் புனாவிலிருந்து தஞ்சைக்குச் சென்றார். அக்காலத்தில் அவரோடு கூடவே சென்ற மகாராஷ்ட்ர பிராமண குடும்பம் ஒன்றில் உதித்தவராவர் நம் ரெகுநாத ராயரவர்கள். கும்பகோணத்தில் தேசஸ்த பிராஹ்மணகுலதிலகராயிருந்த ருப்குண்டை வெங்கடராவுக்கும் ஸ்ரீமதி லட்சுமி பாய்க்கும் பிறந்த புண்ணியராவரிவர். 1831-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 7-ந் தேதி பிறந்தார். இவரது தந்தை சிலகாலம் திருவாங்கூர் சம்ஸ்தானத்தில் திவானாயுமிருந்து பிறகு மைசூரில் ரெவினியூ கமிஷனராயுமமர்ந்தவர். இவரது சிறிய தந்தையான ரங்கராவ் அவர்களும் திருவாங்கூர் திவானாயிருந்தவர்; மகா பிராக்யனென்று பேரெடுத்த ராஜா ஸர் டி. மாதவராவின் தந்தையாவர். ஆகையினாலே நம் ரெகுநாதராயரவர்கள் நற்குலத்திற் பிறந்து கீர்த்திவான்களான பெரியோர்களின் பாந்தவ்யம் ஏற்பட்டு, தீர்ந்த நிருவாகஸ்தரென்று நற்பெயரெடுத்த சிலர்களின் உறவினராயுற்பவித்து, உதித்த உத்தமரென்பதற்குத் தடையென்ன? இவரது தந்தை மைசூரிலிருந்தபோது பெங்களூர்க் கோட்டையிலிருந்த மிஷன் பாடசாலையில் சேர்ந்து படித்த இவர் 1845-ம் வருஷத்தில் சென்னைக்கு வந்து மதிராஸ் ஹைஸ்கூலில் கல்வி கற்கலாயினார். அதே பாடசாலையில் அப்போது இவரது சிறிய தந்தையின் குமாரரான ஸர் டி. மாதவராவ் இங்கிலீஷைப் பூர்த்தி செய்து கொண்டிருந்தார். அக்காலத்தில் ஸர் எ. சேஷய்ய சாஸ்திரி, ஸர் டி. முத்துஸாமி ஐயர், திவான் ரங்காசார்லு போன்ற பிரமுகர்கள் அவருடைய சகாக்களாவர். நிரம்பப்படித்து வித்தியாபட்டம் எதுவும் வாங்காமற்போனாலும் ராயரவர்களுக்கு எதையும் எளிதில் கிரகித்துக் கொள்ளும் தன்மை வாய்ந்திருந்தது. தாம் ஸ்கூலை விட்டு விலகிய பிறகு நான்கு வருஷகாலம் தமது பிதிரார்ஜித சொத்தைப் பரிபாலித்து வருவதில் கண்ணும் கருத்து மாயிருந்தார். இதனால் தான் இவருக்கு ரெவனியூ இலாகாவின் விஷயாம்சங்கள் நன்கு பதியலாயின. 1856ம் வருஷம் மகான் ஸர் டி. முத்துஸ்வாமி ஐயர் அவர்களோடு இவருக்கும் ப்ளீடர் டிப்ளோமா கிடைத்தது. இதன் பிறகுதான் தஞ்சை கலெக்டராபீஸ் டிரான்ஸ்லேடராய் முதன்முதல் வேலையில் அமர்ந்தது. இவ்வேலையினின்றும் படிப்படியாய், தலைமை ஸிரஸ்தாதாராயும், கும்பகோணம் ஸப்கோர்ட்சிரஸ்தாதாராயும் பிறகு தஞ்சை டிப்டி கலெக்டராயும் நியமிக்கப்பட்டார். அப்போது சென்னைக் கவர்னராயிருந்த ஸர் சார்லஸ் டிரெவெலியன் அவர்கள், அவர் சொந்த பிராந்தியத்திலேயே பாரபக்ஷ மன்னியில் திறமையாய் வேலை பார்த்து வந்ததில் மட்டிற்கடங்காச் சந்தோஷங்கொண்டு, தென்னிந்தியா ரெயில்வே கம்பெனியாருக்கு நாகப்பட்டணம் முதல் திருச்சி வரையில் இருப்புப்பாதை போட நிலம் வாங்கிக் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள ராயரவர்களை வேண்டினார். பிறகு துங்கபத்ரா பிராந்தியத்தில் நிலம் வாங்க

வேண்டி வந்தபோது ரெகுநாதராவ் அவர்களே அதற்குத் தகுந்தவரென்று கவர்ன்மெண்டார் நினைத்து அவரது உதவியை நாடினர். 1872-ம் வருஷம் அவர் சென்னை டவுன் மாஜிஸ்டிரேட்டாய் நியமிக்கப்பட்டனர். 1873-ம் வருஷத்தில் க்ஷேத்திராடனம் செய்யப் புறப்பட்டகாலத்தில் மத்தியிலே புனாவில் தங்கினார். அப்போது தான் ஸர். டி. மாதவராவ் அவர்கள் காலஞ்சென்ற இந்தூர் மஹாராஜா நாகோஜிராவ் அவர்களிடம் இவரை அறிமுகம் செய்வித்தார். 1875-ம் வருஷம் இந்தியா கவர்ன்மெண்டாரது வேண்டுகோளின் மேல் இந்தூர் ஸமஸ்தான ரெவினியூ ஸெட்டில்மெண்டு ஆபீஸராய் நியமிக்கப்பட்டார். பிறகு ஸர் டி. மாதவராவ் அவர்கள் இந்தூரை விட்டு பரோடா திவானாய்ப்போனதும் இவருக்குப் பதிலாய் இந்தூர் திவானாகவே ரகுநாதராயரவர்கள் நியமிக்கப்பட்டார். இச்சமயத்தில் இந்தியா கவர்ன்மெண்டாரின் மனதிற்கிசைந்து இந்தூர் ஸமஸ்தானத்தைச் சீர்திருத்திய நேர்மை மிக்கப் புகழத் தக்கதாகவே யிருந்தது. இக்காலத்தில் தான் வேல்ஸ் இளவரசராய் ஏழாவது எட்வர்ட் சக்கிரவர்த்தி அவர்கள் இந்தியாவிற் சுற்றுப் பிரயாணம் செய்தது. அப்போது எட்வர்டு அவர்கள் ரகுநாதராயரவர்களது சாமர்த்தியத்தைக் கண்டு மெச்சி ஒரு பொற்பதக்கமளித்தனர். 1877-ம் வருஷம் நடந்த டெல்லிதர்பார் மகோற்சவகாலத்தில் இவருக்கு திவான்பஹதூர் பட்டம் கொடுக்கப்பட்டது. அதன் பிறகு இந்தூரைவிட்டு சென்னை ரெவினியூபோர்டு ஆக்டிங் சிரஸ்தேதாராய் வேலை பார்த்தார். சொற்ப நாளைக்கெல்லாம் திரும்பவும் டிபுடி கலெக்டர் வேலை பார்க்க நேர்ந்தது. பிறகு திரும்பவும் இந்தூருக்குச் சென்று பின் 1888-ம் வருஷம் கடைசியில் சென்னைக்கு வந்து பென்ஷன் பெற்றுக்கொண்டு விட்டார். இது முதல் தினமானம் பத்திரிகைகளுக்கு விஷயதானம் செய்வதிலும் பொது நன்மையைநாடி ஆசாரச்சீர்திருத்தவகையிலும் விவசாய மார்க்கத்திலும் மனதைச் செலுத்தி மிக்க முயற்சித்து வந்தாரென்பது யாம் சொல்லாமலே விளங்கும். இவர் ஸம்ஸ்கிருத விற்பன்னரென்பது ஆசார சீர்திருத்தவகையில் மநுஸ்மிருதி முதலியவைகளை, ஜெர்மனி, இங்கிலாந்து, ஸாக்ஸனி முதலிய விடங்களிலுள்ள ஸம்ஸ்கிருத விற்பன்னர்கள் மிக்க ஆச்சரியமடையும் வண்ணம் வியாக்கியானம் செய்து அதன் பிரகாரம் ஹிந்து லாவைச் சீர்திருத்த நம் சக்கிரவர்த்தியின் சந்நிதானத்திற்கு அநுப்பியதினின்றும் நன்கு விளங்கும். 1894-ம் வருஷம் முதல்தான் கும்பகோணத்தைத் தமது முக்கிய வாசஸ்தலமாக் கொண்டார். ஸர் ஆர்தர் லாலி கவர்னராய் விளங்கிய காலத்தில் இவருக்கு ஸி. எஸ். ஐ. பட்டம் கொடுக்கப் பட்டது. இறக்கும்போது இவருக்கு வயது 81.

ல. அனந்தய்யர்.

———:-:———

## Rice Milling Industry in South India.

## தென்னிந்தியாவில் நெல்லுக்குத்துந் தொழில்.

———:.:———

நன்செயில் முதல் தரமென்றும் நவதானியங்களுள் மிக்க சிரேஷ்டமானதென்றும் பெயரெடுத்திருப்பது நெல்லு. இந்தியாவிலுள்ள மற்றெவ்விடத்தைக் காட்டிலும் தென்னிந்தியாவிலே தான் நெல் சாகுபடிக்கான நன்செய் நிலங்கள் அபரிமிதமா யிருக்கின்றன. அல்லாமலும் சாகுபடிக்குரிய நிலங்கள் வேளாண்மை செய்வாரில்லாமல் தரிசாகவும் கிடக்கின்றன. சாதாரணமாயுள்ள ஒரு போக நிலங்கள் ஒருபுறமிருக்க மற்றோர்புறத்தில் இருபோக நிலங்களாகவும் முப்போக நிலங்களாகவும் பூஸார மிருப்பதையும் நாம் காண்கிறோம். இவ்வளவு விஸ்தார

மாயுள்ள தென்னிந்தியப் பிரதேசத்தில் சாகுபடி செய்யப்படும் நெற்பயிரிலிருந்து கிட்டும் மகசூலைச் சொந்தக்காரர் களத்திலேயே கலங்கலமாய் விற்று ரொக்கமாகக் கொண்டு செல்லுகிறார்கள், சிலர் நெல்லை அரிசியாய்க்குத்தி வியாபாரஞ் செய்கிறார்கள். சிலர் நெல்லைக் கொண்டுபோய்த் தமக்கும் தம்மைச்சேர்ந்தோர்க்கும் வருஷாந்தர வுபயோகத்திற்காகத் தம் களஞ்சியங்களில் கொண்டுபோய்ச் சேர்த்து பத்திரப்படுத்தி வைக்கிறார்கள். இந்தமூன்று தரத்தவர்களில் நடு வகுப்பினராகிய நெல்லுக்குத்தி அரிசியாக்கி வியாபாரஞ் செய்யும் அவர்களை மட்டும் இப்போது எடுத்துப் பேசுவோம்.

புதிது புதிதான யந்திர விசைகளும், அவைகளைச் செவ்வையாய் ஆராய்ந்து நடத்தக்கூடிய விற்பன்னர்களும் மிகுந்திருக்கும் இக்காலத்தில், வியாபாரஞ் செய்ய விரும்புவோர் நெல்லைக் கையினாற் குத்திப்புடைத்து எடுத்துவாறிக் கொண்டிருப்பார்களா? ஒரு கலம் நெல்லுக்குத்த அரைநாள் கூலி வேலைக்காரர்க்குப் பிடிக்குமானால், அதே அரைநாளில் யந்திரங்களைக் கொண்டு ஆறு முதல் 12கலம் வரையில் குத்திவிடலாமே. இந்த லாபத்தை யுத்தேசித்து அனேக மிராசுதாரர்களும் மற்றோரும நெல்லுக்குத்தும் யந்திரங்களை வாங்கி வேலைசெய்ய ஆரம்பிக்கிறார்கள். இதற்கு உதாரணமாக அடியிற் குறிப்பிட்ட ஊர்களிலெல்லாம் நெல்லுக்குத்தும் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. சென்னைக்கு வடக்கிலுள்ள விடங்களை மட்டும் இதனடியிற் குறித்திருக்கிறோம்.—

நெல்லூர், பொன்னூரு, இண்டூர், ஸூண்டூர், தெனாலி, துக்கிராலா, பெஜவாடா, மணகலகிரி, குண்டூர், நரஸாரவ் பேட்டை, கொத்தவரம், குடிவாடா, மசூலிப்பட்டணம், எல்லூர், புல்லா, தடபல்லிகூடா், [illegible]டதவோலு, ராஜமஹேந்த்ரபுரம், த்வா[illegible], ஸாமல்கோட, காகிநாடா, கோரிங்கா, கொ[illegible]ரோல், துணி, அனகாபல்லி விசாகப்பட்டண[illegible], விஜய நகரம்பேட்

இவ்வூர்களிலுள்ள நெல்லுக் குத்துவதற்கான தொழிற்சாலைகளெல்லாம் சென்ற 15 வருஷங்களுக்குள்ளாகவே ஸ்தாபிதமாயிருக்கு வேண்டுமென்று காணப்படுகிறது. சில நீராவி யந்திரங்களினாலும் வேறு சில எண்ணெய் இயந்திரங்களினாலும் இயக்கப்படுகின்றன. இவற்றுள் அதிக வேலை செய்யக் கூடியவை 50 தானென்றும், புழுங்கலரிசி கூடச் சிற்சில யந்திர சாலைகளில் தயாரிக்கப் படுவதாகவும் தெரிய வருகிறது. ஓரே யொரு ராஜதானியில் சொற்ப காலத்துள் இவ்வளவு ஏராளமான தொழிற்சாலைகள் ஏற்படுவதென்றால் எல்லோருக்குமே என்னதோன்றும்? அபாரமாய் வேலை நடந்து வருவதாகவே தோன்றும். அதையே ஆதாரமாக வைத்துக் கொண்டு இந்தியாவிலுள்ள மற்றையோரும் இம்மாதிரியான தொழிற்சாலைகளை ஸ்தாபித்துப் பயன் பெறலாகாதா வென்றும் பலர் சொல்லுவார்கள்; எனினும் அவர்கள் அத்தொழிலை நுட்பமாய் ஆராய்ந்து முறைப்படி வேலை செய்வதாய் மட்டும் காணோம். சென்னைக்கு வடக்கிலுள்ள இவ்விராஜதானி ஜில்லாக்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் நெல் யந்திர சாலைகளையொப்ப தென்னிந்தியாவிலும், அதிலும்வெகுவாய்த் தஞ்சைஜில்லாவில் உள்ள சிலர் இத்தொழிற்சாலைகளில் அபிமானம் வைத்து ஆரம்பித்திருக்கிறார்கள்; வடக்கே அதிகமாய்த் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதையும், தொழிற்சாலைக்கு உரித்தான யந்திரக் கருவிகள் செய்யும் வியாபாரிகள் தங்கள் தங்களிடமிருந்து கருவிகள் வாங்கும்படி தமது ஏஜெண்டுகளையனுப்பித் தூண்டுவதையும் உத்தேசித்தே இவர்கள் இத்தொழிற் சாலைகளிற் பிரவேசித்திருக்கிறார்களென்று சொல்லவேண்டிவருகின்றது. வடக்கு ஜில்லாவிலுள்ள அனேகர் தாமெதற்காகத் தொழிற்சாலை வைத்தோமென்று மனம் வெதும்பியிருக்கிறார்கள். தொழிற்சாலைகளை முதன் முதல் அமைக்கும்போது அதற்கு வேண்டிய கருவிகள் எல்லாம் வலுவாயிருக்கின்றனவா வென்று

பார்த்தும், மற்ற யந்திர பரிசீலனையிற் சிறந்த விற்பன்னர்களை யழைத்தும் காண்பித்து அதற்குப் பிறகே தொழிற்சாலைகளை யேற்படுத்த வேண்டும். இதல்லாமல் சில விடங்களில் அந்தந்த பூஸாரத்திற்குத் தகுந்தாற்போல் நெற்பயிர் கிட்டும். அங்ஙனம் கிட்டுவதை ஆராயுமிடத்து சில உறப்பாயும் சில மிருதுவாயும், வேறுசில மாவாய்ப் போகக் கூடியவையாயும் இருக்கும். ஆனதுபற்றி அந்தந்த நிலவாசிக்கு ஏற்ற பிரகாரம் அமெரிகன் மாதிரி யந்திரத்தையோ, ரங்கூன் மாதிரி யந்திரத்தையோ அமைத்துப் பின்னும் அதற்கு அவசியமான விரகு, முன்பணம், அதிகமாய் வேண்டியிருக்கக்கூடிய அடுப்புகள், நிலக்கரி முதலிய யாவற்றையும் பரிசீலனை செய்வது மிகவும் அவசியமாகும். இல்லாவிடத்து ஆரம்பத்தில் கங்குகரையில்லாமற் போட்டு இறுதியில் வேலையும் செம்மையாய் நடவாமல் வீணாகக் காலத்தை விரயமாக்குவதைத் தவிர வேறு வகையிராது; ஆனதுபற்றி நாளடைவிற் செழித்துவரும் முக்கியமான இத்தொழிலை விருத்திசெய்ய வேண்டுமானால் எந்தெந்தக் கருவிகள்உள்ளூரிலேயே அகப்படுமோ அவைகளை வாங்கிய பின்னர் இல்லாதவைகளுக்கு மட்டும் பிறநாட்டுக் கருவிகளை தாரதரம் பார்த்து வாங்கி சாலையை அமைக்கவேண்டும். அப்போது கருவிகளில் ஏதாவது ஒன்று பழுதாய்ப்போனால் அதிக செலவில்லாமல் வேறொன்றைப் புதிதாய் உள்ளூரிலேயே செய்து வேலையை நடத்தலாம். இது விஷயத்தை நெல்லுக் குத்தும் தொழிற்சாலைகளை வைப்போர் அவைகளுக்கு நீராவி யந்திரங்களையும் எண்ணெய் யந்திரங்களையும் (Oil Engines) வாங்கி வைப்பதன் முன்பு அவைகளில் அனுபவம் வாய்ந்த சிலர்களைக்கொண்டு பரிசீலனை செய்வித்தால் மாத்திரம் பிரயோஜனத்தைக் கொடுக்குமே யல்லாது வியாபாரஸ்தர் வலியவந்து யந்திரங்களைக் கொடுக்கிறார் என்ற பெருமையை வைத்துச் சாலைகளை ஆரம்பிப்பது கஷ்டத்திற்கும், நஷ்டத்திற்கும் கொண்டுவந்துவிடும் என்பதை யாம் அதிகமாய்ச் சொல்ல வேண்டுவதில்லை. ல. அனந்தய்யர்.

(:o:)

## சென்னை மாகாணக் கான்பெரன்ஸ்.

:*:

### உபசரணைக் கமிட்டிச் சேர்மனுடைய வரவேற்பு.*

(Communicated.)

"தங்களை அழைத்து உபசரிக்க ஏற்பட்டிருக்கும் ஸபையாருக்காக நான் தாங்கள் இந்தப் புராதன நகரத்திற்கு விஜயம் செய்ததற்காக மனப்பூர்வமாக நல்வரவு கூறுகிறேன். ஒரு காலத்தில் கும்பகோணம் இந்த ஜில்லாவுக்கே தலை நகராயிருந்தது. அந்தப்பெருமை இப்போதில்லாவிடினும், பிரஸித்தியில்குறைவில்லை. காவிரியின் தென்கரையிலுள்ள இந்தப் பட்டணத்தில் தேவாலயங்கள் அனேக மிருக்கின்றமையால், யாத்திரைக்காரர்கள் மிகுதியாக இங்கே வருகிறார்கள். ஊரிலுள்ள குளங்களில் மிகவும் பெரிதான மகாமகக் குளத்தில் ஸ்நானஞ் செய்வதற்குப் பன்னிரண்டு வருஷத்திற்கொருமுறை [illegible] ஜனங்கள் கூடுகிறார்கள். இந்தப்பட்டணம் கொஞ்ச நாளுக்குமுன் ஸம்ஸ்கிருதப் படிப்பு விஷயத்தில் பெயர்போனதாகவிருந்தது, இந்த நகரவாசிகள் அனேகர் சதுர்சாஸ்திர பண்டிதர்களா யிருந்தார்கள், மற்ற விடங்களில் ஸம்ஸ்கிருதப் படிப்புக்கு க்ஷீணத்தை உண்டாயிருப்பதுபோல இந்த ஊருக்கும் வந்திருக்கிறது. ஸர்க்கார் ஸர்வகலாசாலை ஒன்று இங்குண்டு. போர்டர், கோபாலராவ் என்ற மகான்கள் மேற்படி கலாசாலைக்கு அதிபதிகளாக இருந்தகாலத்தில் "தென் இந்தியா கேம்பிரிட்ஜ்" என்று கும்பகோணத்திற்கு பட்டப்பெயர் வழங்கிவந்தது. அந்தப் பெருமை இப்பொழுது இருப்பதாகக் காதில்படாமல் போனபோதிலும் ஸர்வ கலாசாலையின் மாணாக்கர்கள் இந்த ராஜதானியிலுள்ள ஒவ்வொரு பட்டணத்திலும் பற்பல விருத்திகளில் அமர்ந்திருக்கிறார்கள். கும்பகோணம் கைத்தொழிலுக்காகவும் பெயர்போனது. தென்பாதியிலுள்ள ஸௌராஷ்டிர ஜாதியார் பம்பாயிலிரு

* Translation of the Welcome Address of Rao Bahadur V. K. Ramanuja Chari, Chairman of the Reception Committee of the 19*th* Provincial Conference, held at Kumbhakonam, on the 8*th* May 1912.

ந்து ஏராளமான பட்டுகளைத் தருவித்து சென்னபட்டணம் முதலான விடங்களில் கொரநாட்டுச் சேலைகளென்று சொல்லப்பட்ட பட்டு வஸ்திரங்கள் செய்து பக்கத்திலுள்ள ஜில்லாக்களில் விலையாக்குகிறார்கள். ஆனால் தொழிலாளிகள் ஐக்கியமத்தியத்தையும் இயந்திர உபயோகத்தையும் தெரிந்துகொள்ளவில்லை. வியாச்சிய மாடுவதில் இந்தப் பட்டணம் முதன்மை பெற்றிருக்கிறது. இந்தவூரில் இரண்டு சப் கோர்ட்டுகளும், இரண்டு முன்சிப் கோர்ட்டுகளும் இருக்கின்றன. கொசுக்களின் உபத்திரவம் மிகுதியாக இருப்பதினால் இராத்திரியில் கொசுவலை இல்லாவிட்டால் தூக்கம்பிடிப்பது துர்லபம்.

சென்னையில் இந்த மகாசபை கூடி ஒரு வருஷம் ஆகின்றது. மத்திய காலத்தில் அனேக விசேஷங்கள் நடந்துள்ளன. அவைகளில், முதன்மையானது மாட்சிமைதங்கிய நமது சக்கரவர்த்தியும் சக்கரவர்த்தினியும் இந்த தேசத்திற்கு விஜயம் செய்ததுதான். அவ்விருவருடைய வருகையில் நமது நாட்டுக்கு உண்டாயிருக்கும் நலங்களை இங்கு எடுத்துச்சொல்வது அனாவசியம். ஆயினும் காங்கிரஸில் சம்பந்தப்பட்டவர்களுக்கு விசேஷ திருப்தியை யுண்டாக்கும் இரண்டு விஷயங்களை மாத்திரம் சொல்லுகிறேன்; வங்காளத்தில் சில ராஜத்துரோகமான காரியங்களைச் செய்யத்தொடங்கினது முதல் அவைகளை நல்ல எண்ணமுள்ள எவரும் பிசகென்று நன்றாய்ச் சொல்லியும் ஆங்கிலேய பத்திராதிபர்களில் சிலர், படித்த இந்தியர்கள் ராஜத்துரோகிகளென்று சொல்லிக்கொண்டு வந்தார்கள். படித்த இந்தியர்களோ இது வீண் அபவாதமென்று சொல்லிக்கொண்டு வந்தார்கள். சக்ரவர்த்தியும், சக்கிரவர்த்தினியும், விஜயம் செய்த காலத்தில்தான் படித்தவர்களும் படிக்காதவர்களுமான இந்தியர்கள் நிர்த்தோஷிகள் என்று ஸ்தாபிக்கப்பட்டது. நமது சக்கிரவர்த்தியும் சக்கிரவர்த்தினியும் தமது கண்களாலேயே நாம் ராஜபக்தி யுள்ளவர்களென்று தெரிந்துகொண்டார்கள்; அவ்விருவரும் திரும்பி ஆங்கிலேய தேசத்திற்குச் செல்லுங்காலத்தில் தமது அபிப்பிராயத்தை அடியில் வருமாறு வெளியிட்டிருக்கிறார்கள்—"இந்து தேசத்து என்னிடம் விசுவாசமுள்ள குடிகள், நாங்கள் சென்ற ஐந்துவாரம் இந்தியாவில் போன ஒவ்வொரு இடத்திலும் காலத்திலும் காட்டின மனப்பூர்வமான ராஜபக்தி வாஸ்தவமான பிரியமாகிய விரண்டு குணங்களும் எல்லாருடைய மனங்களிலும் குடிகொண்டவை யென்று நாங்கள் எண்ணுகிறோம்." இது சக்ரவர்த்தியாரது விஜயத்தின் முதற் பிரயோஜனம்.

இரண்டாவது பிரயோஜனமாவது:—ஆங்கிலேய துரைத்தனத்தின் நீதியிலும் சத்தியத்திலும் நமக்கிருந்த நம்பிக்கையை ராஜாவின் வரவு நிலை நிறுத்தியது. ஒரு காலத்தில் நம்மவர் ஆங்கிலேய துரைத்தனத்தாருக்குச் செய்துகொள்ளும் மனுவுக்கு ஜவாப் ஒன்று மிருக்காதென்று எண்ணினதுண்டு. நம்முடைய மனுக்கள் அரண்யரோதனம் போலாகுமென்றார்கள். மனுப்பண்ணிக் கொள்வதை யாசகத் தொழிலென்று பரிகாசம் செய்து தேசம் முன்னுக்கு வரவேண்டியதற்கு சுயப்பிரயத்தினமே வேண்டியதென்று அபிப்பிராயப்பட்டிருந்தார்கள். இந்தப் பிசகான எண்ணம் நீடித்திருந்தால் நம்மவரில் சிலருக்கும் துரைத்தனத்தாருக்கும் மனவேறுபாடு உண்டாகிவிடும். நல்லவேளையாக ராஜ விஜயமானது இந்தக்கேட்டை விலக்கிவிட்டது. வெங்காளம் இரண்டு பாகங்களாக ஏற்பட்டிருந்ததை மறுபடியும் ஒன்றாய்ச் செய்ததினால் நம்முடைய குறைகள் வாஸ்தவமாக விருந்து அவைகளை நமது மகாராஜாவுக்கும் ஆங்கிலேயருக்கும் மனதில் படும்படி தெரிவித்தால் அவைகளை உடனே நிவர்த்திசெய்வார்களென்று தெளிவாய்க் காட்டப்பட்டது. மேலும் நியாயமான காரியம் செய்வதில் காலாவதியை ஒரு முகாந்திரமாகச் சொல்லமாட்டார்களென்றும் விளங்குகிறது. நம்முடைய

க்ஷேமத்தில் தாம் கண்ணுள்ளவர் என்று நம்பலாமென்றும் சக்கரவர்த்தி வாக்களித்திருக்கிறார். ஆதலால் நம்முடைய குறைகளைத் தெரிவிப்போமானால் அவற்றைக் கேட்டுப் பரிகாரம் செய்வார்கள் என்றும், இந்தக் கான்பரன்சில் நாம் படும் பிரயாசம் வீண்போகாதென்றும் நம்பி நம்முடைய தேசாபிவிருத்தியின் பொருட்டு மேன்மேல் முயற்சி செய்யலாம்.

நாம் செய்யும் காரியங்கள் சபலமாவதற்குச் சில பிரதானமான விஷயங்களில் நாம் கவனித்தல் வேண்டும். முதலாவது எல்லா ஜனங்களையும் நம்மோடொத்து நடக்கும்படி செய்து ஏகோபித்துக் குறைவுகளை வெளியிடவேண்டும். ஆங்கிலேய துரைத்தனம் நம்முடைய தேசத்தில் ஏற்பட்டு ஒருநூற்றாண்டு ஆனபிறகுதான் நாஷனல் காங்கிரெஸ் மகாசபையைக் கூட்டின தேசாபிமானிகளின் மனதில் நாம் அனைவரும் ஒரே ஜனமென்றும் நம்முடைய கோரிக்கைகளும் குறைகளும் ஒரேமாதிரியானவை என்றும் முதலில் பட்டது. இந்தக்கருத்து வரவர பலப்பட்டுக்கொண்டே வருகிறதாயினும் கிராமவாசிகளாய் இருக்கப்பட்டவர்களில் பெரும்பாலாரும் பொதுநலம் என்று ஒன்று இருப்பதைத் தெளிவாய் அறிந்தவரில்லை. மனிதன் முதலில் சுயநலத்தில்தான் புத்தியை விசேஷமாய்ச் செலுத்துகிறான். அதன்பின்பு தன்னை மறந்து தன்னுடைய குடும்ப சம்ரக்ஷணையில் தன் வருத்தம் பாராமல் பாடுபடுகிறான். வரவர தன் குடும்பம்போல் தன் சாதியாரையும் பாவித்து அவர்களுக்காகப் பாடுபடுகிறான். கடைசியில் தன் தேசத்தையும் தன் குடும்பம்போல் பாவிக்கிற அறிவு உண்டாகின்றது. குடும்ப நயத்திலிருந்து ஜாதிநயத்தைப் பிரிக்கவும் ஜாதியின் க்ஷேமத்தை யுத்தேசித்து குடும்ப க்ஷேமத்தை மறக்கவும் தெரிந்துகொண்டிருக்கிறோம். இது போதாது. ஜாதி நயத்திலிருந்து தேசத்தையே பெரிதாக எண்ணவும் தேசத்திலுள்ளவர்களனைவரையும் நமது சகோதர சகோதரிகளாய்ப் பாவிக்கவும், பொது நன்மைக்குரியவற்றை மதிக்கவும் தெரிந்துகொள்ள வேண்டியது.

நம்மவர்களில் தலைவர்களாய் இருக்கிறவர்கள் கிராமவாசிகளுக்கு இந்த விஷயங்களை வற்புறுத்தவும் அவர்களுக்குப் பொதுநன்மையில் சிரத்தையுண்டாகும்படி செய்யவும் வேண்டும். நம்மிடத்தில் நல்ல அபிப்பிராயமுள்ளவர்களும் நாம் வெவ்வேறு ஜாதிகளாயும் மதங்களாயும் பிரிக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் பொது நலத்திற்கு ஒன்றாய்ச் சேரக்கூடியவர்களல்லவென்று எண்ணுகிறார்கள். இந்த அபிப்பிராயம் சரியானதல்ல. ஜாதிமத பேதங்களை முற்றிலும் மறந்து சக்ரவர்த்தியார் வந்திருந்த காலத்தில் அவருக்கு வழிபாடுசெய்ய நாம் ஒன்று சேரவில்லையா? அதே ஐக்கியமானது பொது நலத்திற்காக கூடுகிற சமாஜங்களிலும் இருக்கமுடியாதா? நாம் சுயலாபத்தைக் கவனிப்பவர்களென்றும் பொது நன்மையை நாடாதவர்களென்றும் குறை கூறுகிறவர்களுமுண்டு. அவர்களை கொஞ்சம் பொறுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பொதுநலம் பாராட்டும் குணமானது சிறிது சிறிதாக வளருகின்ற ஓர் செடி. அது கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்துகொண்டேயிருக்கிறது. கவனிக்க வேண்டிய இரண்டாவது விஷயமானது:—பிரமுகர்கள் பொது நலத்திலேயே லக்ஷியம் வைத்தவர்களாக இருத்தல் வேண்டும்; நமக்கு இந்த விஷயத்தில் கனம் கோகலேயைவிட வேறு உதாரணம் வேண்டியதில்லை. சாதாரண ஜனங்களுக்கு தமக்கு ஏற்பட்ட தலைவருக்குக் கீழ்ப்படிந்து நடத்தலும் அத்தியாவசியம். இந்தக் கீழ்ப்படிதல் இல்லாவிட்டால் ஒரு காரியமும் முற்றுப்பெறாது.

நமது நாட்டில் பெரிய குடித்தனக்காரர்களாகவிருக்கும் கனவான்கள் தமது ஒய்வு காலத்தையும் திரவியத்தில் சில பாகத்தையும்

பொது நலத்திற்குச் செலவிடவேண்டுமென்று கோருகிறேன். ஈசுவர கிருபையால் பெருங்குடித்தினக்காரர்கள் அன்னவஸ்திராதிகளுக்கு உழைக்கவேண்டிய அவசியமில்லாதவர்களாயும் தக்க வரும்படி யுள்ளவர்களாயு மிருக்கிறார்கள். போதுமான சாவகாசமு முடையவர்கள். இந்த சாவகாசமும் வரும்படியும் சுயநலத்திலேயே செலவிட வேண்டியவையல்ல. பொதுஜனங்களினுபயோகத்திற்காகவே கொடுக்கப்பட்ட தர்ம சொத்தாகவே அவைகளை எண்ணவேண்டும். ஆகவே, பொதுவான காரியங்கள் எதுவாயிருந்தபோதிலும் அதைச் செய்வதற்கு தனவான்கள் முன்வந்து நிற்கவேண்டும். சர்க்கார் உத்தியோகத்தில் பிரவேசித் திருக்கிறவர்களையும் வேண்டிக்கொள்வதொன்றுண்டு. இவர்கள் உசிதமான பென்ஷன் கிடைத்து குடும்ப ஸம்ரக்ஷணைக்கு வேண்டியபொருள் தேடியானவுடனே சர்க்காருத்தியோகத்திலிருந்து நீங்கி சரீரத்தில் கொஞ்சம் பலம் இருக்கிற காலத்திலேயே பொது நன்மைக்கு உழைக்கவரவேண்டும். ஆயுள் முழுதிலும் துரைத்தனத்தாருக்கு உழைத்துவிட்டபிறகு ஒருவேலையும் செய்யாமல் சும்மாவிருத்தல் கூடாதென்று சொல்லலாகுமா? என்று சிலருக்குச் சங்கையுண்டாகலாம். நாம் உறுதியாய் ஞாபகத்தில் வைக்கவேண்டிய விஷயம் ஒன்று உண்டு. அதாவது நாமனைவரும் எக்காலமும் ஊழியஞ் செய்யவே பிறந்தவர்; உழைப்பதிலிருந்து தப்புதல் இல்லை. சலித்துப்போன ஒரு வேலையை விட்டு மற்றொரு வேலையைக் கைக்கொள்ளுவதே இளைப்பாறுதல். சர்க்கார் உத்தியோகஸ்தர் வாங்கும் பென்ஷனனது, துரைத்தனத்தாரால் கொடுக்கப்பட்டபோதிலும், வாஸ்தவத்தில் பிரஜைகளாலேயே கொடுக்கப்படுகிறது என்றும், அவர் வேலையில் இருந்த காலத்தில் கிடைத்த அனுபோகத்தை பிரஜைகளுடைய வேலையில் அவர்கள் செலவழிக்கக் கடமைப்பட்டவர்களென்று எப்போதும் நினைத்துக் கொண்டிருக்கவேண்டியது. நான் வாஸ்தவசங்கதி இன்னதென்று தெரிந்துகொண்டிருப்பதைச் சொல்லுகிறேன். அது பிசகாயிருந்தால் மன்னிக்கவேண்டும். சிலர் பென்ஷன் வாங்கக்கூடியவர்களாயினும், தங்களுடைய உத்தியோகத்தைக் குறித்து தமக்கு ஜனங்கள் செய்யும் உபசாரங்களையும் தம்மைச் சூழ்ந்திருக்கும் சேவகர்களையும் விட்டுவிலக மனமில்லாதவர்களாய் வேலையிலேயே இருந்து வருகிறார்கள். சிலர் பென்ஷன் வாங்கிக்கொண்டபிறகும் தாம் தெய்வப்பிறப்பென்றும் சாமானிய ஜனங்களோடு கலத்தல் கூடாதென்றும் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். இது பிசகு. தாம் அடைந்திருந்த உயர்ந்த பதவி தமக்குத் தற்செயலாய்க் கிடைத்ததென்பதை முற்றிலும் மறந்தார் போலும். அதிருஷ்டவசத்தால் பிறரும் அதே அந்தஸ்துக்கு வரக்கூடியவர்கள் தாம்.

இந்த மாகாண சபை விஷயமாய் இந்த ஜில்லாவில் நான் பற்பலவிடங்களில் போனபோது என்னைப் பலரும் இந்த சபையின் பிரயோஜனம் என்னவென்று கேட்டார்கள்; வேறுசிலர் சட்ட நிர்மாண சபைகள் சீர்திருத்தம் பெற்ற பிறகு இந்த சபைக்கு வேலையில்லை என்றெண்ணி இதே கேள்வியையும் கேழ்க்கிறார்கள். இதற்கு பதில் சொல்லுகிறேன். இவ்விதமான சபைகள் செய்யும் வேலைகள் மூன்று, கனம் சேஷகிரி அய்யர் அவர்கள் சென்ற வருஷ சபையில் சொல்லியபடி, முக்கியமான விஷயங்களில் ஜனங்கள் தீர்க்காலோசனை செய்து தங்களுக்கு அவைகளிலுள்ள அக்கரையைத் தெரிவித்தால், சட்ட நிர்மாண சபையின் மெம்பர்கள் அவற்றைக் குறித்துத் தீர்மானங்கள் பிரேரணை செய்யலாகும். சென்ற வருஷத்தில் நமது கவர்னர் ஸர் ஆர்தர் லாலி அவர்களும் இந்தப் பிரயோஜனத்தை சபையின் பிரதிநிதிகளுக்கு எடுத்துச் சொன்னது தங்களுக்குத் தெரிந்திருக்குமே. இரண்டாவது, சட்ட நிர்மாண சபையில் நமது பிரதிநிதிகள் தாமே சில தீர்மானங்

களைப் பிரேரணை செய்யலார். அந்தத் தீர்மானங்கள் நமக்கு நன்மை பயக்கக் கூடியவையாய் இருக்குமாயின் நாமும் அவர்களுடன் சேர்ந்து தீர்மானங்களை பலப்படுத்தலாம். பத்திரிகைகள் இந்த வேலையைச் செய்கின்றன; அதுமட்டிலும் போதாது. ஆங்கிலேய தேசத்தில் பொது நன்மையைக் குறித்துச் செய்யும் விஷயங்களுக்கு உதவியாய் மகாஜனங்கள் கூட்டம் கூடுவதுண்டு. இப்போது நடக்கும் சபையும் அதே வேலையைத்தான் செய்கிறது. நம்முடைய சபையோ மூடஜனக் கூட்டமல்ல. இதன் மெம்பர்கள் அறிவிலும் பதவியிலும் உயர்ந்தவர்கள். மூன்றாவது, வெவ்வேறு ஜில்லாக்களிலிருந்து ஜனங்களை ஒரே விடத்தில் கூட்டி பொது நன்மைக்குப் பாடுபடும்படி செய்கிறது. இந்தப் பழக்கம் வருஷா வருஷம் ஏற்பட்டால் பொது நன்மைக்குப் பாடுபடும் வாடிக்கைகள் உண்டாகும்.

இவ்வித மகா சபைகள் சில வக்கீல்களால் மட்டில் நடத்தப் படுகிறதென்று சிலர் சொல்லக் கேட்டிருக்கலாம். இதில் கொஞ்சம் உண்மையுண்டு. இங்கிலீஷ் படிப்பு வந்த பிறகுதான் ஜனங்கள் இப்படி ஒன்று சேர்ந்து தமது லாப நஷ்டங்களைப்பற்றி அதிகாரிகளுக்குத் தெரிவிக்கிற வாடிக்கை பிறந்தது. படித்தவர் சர்க்கார் உத்தியோகத்தில் அமர்கிறார்கள். அல்லது பள்ளிக்கூட வாத்தியாயர்களாகளாவது வக்கீல்களாயாவது ஆகிறார்கள். வக்கீல்கள் மாத்திரம் பொது நன்மையில் வேலைசெய்யலாகும். இதரர்களுக்கு நிர்ப்பந்த மிருக்கிறது. சில காலமாக மிராசுதாரர்களும் வியாபாரிகளும் பொது நன்மைக்கு உழைக்க வந்திருக்கிறார்கள். இந்த சபையிலும் அவ்வகுப்பினர் முன்னிலும் ஜாஸ்தியாக இருப்பதைக் காணலாம். மடாதிபதிகளும் சபையின் காரியத்தில் அன்பு பாராட்டும் பாக்கியம் இந்த சபை பெற்றிருக்கிறது.

தற்காலத்தில் நம்மவர்கள் கவனிக்கும் விஷயங்களைக் குறித்து நான் எடுத்துப் பேசப் போகிறதில்லை. அது அக்கிராசனாதிபதியவர்களுடைய காரியம், இந்த ஜில்லா மிராசுதாரர்கள் பெரிதாய் எண்ணும் மூன்று விஷயங்களைக் கவனிக்கும்படி தங்களைக் கேட்டுக் கொள்கிறேன். அவைகளாவன:—(1) ரெவென்யூ ஸெடில்மெண்ட், (2) கூலியாட்கள் கப்பலேறிப்போதல், (3) பாய்ச்சல் வாய்க்கால் வெட்டுவித்தல். 18—வருஷத்திற்கு முன் இந்த ஜில்லாவில் தரம் பைசல் செய்ததில் புதிதாக இரண்டு தரங்கள் ஏற்பட்டன. (1) வண்டல் களி (2) வண்டல் மிச்ரம். இப்படித் தரம் போட்டதற்குக் காரணம் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள பூமியை செவ்வல் என்றாவது கரிசல் என்றாவது சொல்லக் கூடாமைதான். இவ்விரண்டு வகுப்பும் ஐந்து உட்பிரிவாக பிரிக்கப்பட்டன. யாவரும் பார்த்த உடனே ஒரு பூமியானது கரிசலா செவ்வலா என்று சொல்ல முடியும்; ஊன்றிப் பார்த்தால் கரிசல் செவ்வல்கள் களியா, மணலா, இவை இரண்டும் கலந்தனவா என்பதையும், சொல்லி விடலாம். பார்த்தவுடனாவது எவ்வளவு கவனம் வைத்தாவது ஒரு தரத்தை மற்றொன்றிலிருந்து தெரிந்துகொள்ளுதல் முடியாது. இதற்காக தரம் பைசல் செய்யும் உத்தியோகஸ்தர் கிராமங்களுக்குப் போக ரஸ்தாக்களிருப்பதையும், அவைகளிலிருந்து நெல்லு முதலானவைகளைக் கொண்டுபோய் விற்கக் கூடிய இடங்களின் சாமீப்பியத்தையும் பாய்ச்சல் சௌகரியங்களையும் கவனிக்கிறார்கள். சர்க்காருக்கு எந்தத்தரம் அல்லது உள்வகுப்பு அதிக தீர்வையைக் கொண்டுவரும் என்பதையே அவர்கள் முக்கியமாய்க் கவனிக்கிறார்கள். ஆகையாலேதான் மேலுத்தியோகஸ்தர்கள் நிரம்ப கவனமாய் பரிசிலனை செய்தும் மாயவரம், கும்பகோணம், நன்னிலம் தாலூகாக்களில் நிலங்கள் உயர்ந்த தரத்தில் போடப்பட்டதுகள். ஆகவே ரெவினியூ அபாரமாக உயர்ந்து விட்டது. மிராசுதாரர்கள் தெரிவித்துக் கொண்டதின்பேரில் ரெவினியூ போர்ட்டாரும்

கவர்ன்மெண்டாரும் தரம் உயர்ந்து போட்டது வாஸ்தவம் என்று ஒப்புக்கொண்டு உட்பிரிவைக் குறைத்துத் தரத்தைத் தாழ்த்தும்படியாக உத்திரவு பிறப்பித்தார்கள். இன்னும் சிறிது காலத்தில் வரும் செட்டில்மெண்டில் இந்த விஷயங்கள் ஞாபகத்திலிருக்க வேண்டுமென்றும் கடைசியாக ஏற்பட்ட கிளாசு உட்பிரிவுகள் மாறுபடக் கூடாதென்றும் தஞ்சாவூர் ஜில்லா மிராசுதாரர்களாகிய நாங்கள் மிகவும் கவலையுள்ளவர்களா யிருக்கிறோம். வரப்போகிற செட்டில்மெண்டில் கவர்ன்மெண்டார் பலமுறை சொல்லி யிருக்கிறபடி விலைவாசியொன்றே சவனிக்கப்படுமென்று நம்புகிறோம். 30-வருஷத்துக் கொருதரம் செட்டில்மெண்டு செய்கிறதானது நாட்டின் க்ஷேமவிருத்தியைத் தடுக்கின்றது. ஒரு தலைமுறையில் ஒரு செட்டில்மெண்டுக்கு மேற்பட்டு வேண்டாமென்று இவ்வாறு செய்தார்போலும். ஜனங்கள் அதைப் போன்ற கொடிய கொடிய வியாதிகளால் பிடிக்கப்பட்டும் நம்மவரில் சிலர் 60, 70-வயதுவரையிலும் ஜீவந்தர்களா யிருக்கின்றமையால், ஒரு புருஷாயுசிலேயே இரண்டு செட்டில்மெண்டு மிகவும் கடமையாயிருக்கிறது. இப்போது ஏற்பட்டிருக்கும் தீர்வைகளை சாசுவதமானதாகச் செய்யும்படி நாம் கவர்ன்மெண்டைக் கேட்க வேண்டாமா வென்றும், அது கூடாதாயின் 60 வருஷத்திற்கு ஒரு முறை செட்டில்மெண்டு செய்யும்படி மனுச்செய்துகொள்ள வேண்டாமாவென்றும் இந்தச்சபை யோசிக்க வேண்டியது. நம்முடைய கூலியாட்கள் கப்பலேறி வேறு தேசத்திற்குப்போய் விடுவதனால் வியவசாயவேலை வெகுவாகத் தடைபட்டும் போகிறது. அதிக கூலியைத்தேடி அது அகப்படும் இடத்திற்குப் போகிற எவரையும் தடுக்க நமக்கு அதிகாரமில்லை. ஆனால் நம்மிடத்தில் வியவசாயவேலை செய்வதாய் முன்பணம் வாங்கிக் கொண்டதை அவர்கள் திருப்பி நமக்குக்கொடுத்த பின்பு தான் அவர்கள் வேறு நாட்டிற்குப் போக வேண்டுமென்று நாங்கள் எண்ணுகிறோம். இது விஷயமாக இந்த சபையார் ஓர் தீர்மானஞ் செய்யவேண்டியது அவசியம். நம்முடைய பாய்ச்சல் வாய்க்கால்கள் எக்கலெடுத்தது தூர்ந்து போயிருக்கின்றன. கிராமவாசிகள் சேர்ந்து வேலைசெய்ய வராமையினால் குடிமாராமத் ஆக்டின் நிபந்தனைகளை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரும்படி ரெவின்யூ அதிகாரிகளுக்கு மனுச்செய்துகொள்ள அவசிய முண்டாகிறது. குடிமாராமத் ஆக்டோ சில விஷயங்களில் குறைவுள்ளதென்று ரெவின்யூ உத்தியோகஸ்தர்களும் கவனிப்பதில்லை என்று புகார் உண்டு. இந்தக் குறைகள் நிவர்த்திக்கப்பட வேண்டியவை. துரைத்தனத்தாரும் மிராசுதாரர்களுடன் சேர்ந்து வாய்க்கால் தலைப்பிலிருந்து கிராம எல்லைவரையில் வாய்க்கால் வெட்டி வேலைக்கு ஒத்தாசை செய்யவேண்டியது.

சென்ற வருஷத்தில் நம்முடைய தேசத்தின் இரண்டு உண்மையான பிள்ளைகளை நாம் இழந்து போனதைச் சொல்லாமலிருக்கக் கூடாது. அவர்களில் ஒருவர் கனம் வி. கிருஷ்ணசுவாமி அய்யர். அவருக்குள்ள விசேஷ சாமர்த்தியத்தைக் கொண்டு நாம் எதிர்பார்த்த அனுகூலியங்கள் கிடைக்காமல் போய்விட்டன. மற்றொருவர் கனம் திவான்பகதூர் ஆர். ரெகுநாதராவ். அவரைச் சரியாகவே தென்னிந்தியாவின் பெரிய கிழவர் என்று எல்லாரும் கொண்டாடினோம். இவ்விருவருடைய பிரிவும் எனக்குப் பெரியநஷ்டம். ஒருவர் எனக்குச் சிநேகிதர். மற்றொருவர் என்னைப் பிள்ளைபோற் பாராட்டினர்.

அதிகமாக நான் இனி சொல்லவேண்டியது ஒன்றுமில்லை. உஷ்ணகாலத்தில் இவ்வளவு அசௌகரியத்தை கவனிக்காமல் எங்களுடைய கூப்பாட்டை அங்கீகரித்து இங்குவந்து கூடினதற்கு தங்களுக்கு மறுபடியும் மறுபடியும் மனப்பூர்வமாய் வந்தன மளிக்கிறேன். எங்களாலானமட்டும் தங்களுடைய சௌகரியங்களைக் கவனிக்கத் தயாராக விருக்கிறோம்.

## Herbs with Rare Qualities.

## அபூர்வசக்தி வாய்ந்த மூலிகைகள்.

——:o:——

"ஆயிரம் வேரைக்கொன்றவன் அரைவைத்தியன்."

மருந்துக்கு எடுத்தது மூலிகை யென்பர் பெரியோர். மூலிகைகளில் எத்தனையோ விதங்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விதமான சக்தியும் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அம்மூலிகைகளை ஆராய்ந்து பார்த்தோர் எவருமில்லை. மூலிகைகள் முழுமையும் ஒருவனிடம் சிக்கிவிட்டதென்று சொல்லவும் முடியாது. ஏனென்றால் ஒரு மூலிகை நல்ல மணற் பிரதேசத்தில் கிடைத்தால மற்றொரு மூலிகை நல்ல களிமண் பிரதேசத்தில் கிடைக்கின்றது. இன்னொன்று மலையடிவாரங்களிலும், வேறு சில அடர்ந்த அடவிகளிலும் கிடைக்கின்றன. இந்த விதமாய்ப் பூவுலகெங்கும் பரவியிருக்கும் மூலிகைகள் அனைத்தையும் ஒருவன் கண்டுபிடித்துப் பரீக்ஷைசெய்ய வேண்டுமானால் தேச தேசமாய்ப் பிரயாணஞ் செய்தல் வேண்டும். போகாத விடங்களுக்கெல்லாம் போய்ப் பச்சிலையிருப்பதைப் பரிசிலனை செய்ய வேண்டும். ஆங்காங்குள்ள பச்சிலைப்பிரதேசங்களையறிய அவ்வவ்விடத்து ஜனங்களின் பரிச்சயத்தை நாடல்வேண்டும். இப்படியெல்லாம் செய்வது எவ்வளவு சிரம சாத்தியமென்பது இதனைப்படிப்போரே தெரிந்து கொள்ளலாம். சிரமசாத்தியமானாலுங்கூட பரிசிலனை செய்தால் அதுகாரணமாக பலன் ஏற்படாமற்போகாது. சமீபத்தில் அனங்கமாலாமலைப் பிரதேசத்தில் சுற்றுப் பிரயாணஞ் செய்த ஐரோப்பியர் ஒருவர் அபூர்வ சக்தியோடு கூடின சிற்சில பச்சிலைகளைக் கண்டுபிடித்திருப்பதாகச் செய்தி யெட்டுகின்றது. ஆனால் இவர் கண்டு பிடித்திருப்பதில் ஒரு விசேஷமும் உண்டு. மீனைப்பிடிக்க வேண்டுமென்றால் சிறு மீன் ஒன்றைத் தூண்டிலில் போட்டுத் தண்ணீரில் விட்டால் தான் பெருமீன் அதனிடம் வந்து நாடும். இது போலத்தான் புதிதாய் ஒன்றைக்கண்டு பிடிப்பதும்; அதைக்கண்டு பிடிப்பதற்குள் உற்பவிக்கும் நஷ்டங்கள் எத்தனையோ யிருக்கலாம். எங்கும் எவ்விடத்தும் நஷ்டமில்லாமல் லாபம் ஏற்படமாட்டாது; அதாவது லாபம் வரும்போது நஷ்டமும் ஓரிடத்தில் வந்து தான் சேரும். நஷ்டம் வந்துவிட்டதே யென்று பிரலாபிக்காமல் எடுத்த முயற்சியைக் கடைப்பிடித்தால், லாபம் வருவது நஷ்டமாய்த் தோன்றினாலும் காலக்கிரமத்தில் அந்த லாபத்தையடைய எவராலாவது ஒரு வழியேற்படக்கூடும். இதுவே உலக சித்தாந்தம். இந்த ஆதாரமே மேலே சொன்ன ஐரோப்பியர் கண்ணாரக்கண்ட அனுபவம்.

இவர் பார்த்து வந்த அனங்கமாலாமலை யென்பது மேற்றிசை மலைகளைச் சேர்ந்ததோர் பகுதி. மலையாளத்தின் தென்பாரிசத்தில் உள்ளது எனவே ஒட்டபாலம் ஸ்டேஷனுக்கு வடக்காகும். ஒட்டபாலம் ஸ்டேஷனுக்கு வடக்காய் ஆறுமைல் தூரத்தில் கோதைக்குறிச்சி யென்னும் கிராமமிருக்கிறது. இங்கிருந்து இவ்வனங்கமாலாமலை யென்பது ஆரம்பமாகி குனங்காடு வரையிற சென்று வளைந்து மூன்று யோசனைதூரம் செல்லுகின்றதாம். சாதாரணமாய் இம்மலை 1298 அடி உயரமுள்ளது. இம்மலையின் முக்கியமான பாகத்திற்கு வந்து சிகரத்தைப் பார்த்தால் அவ்விடததில் மூன்று அடி குறுக்களவுள்ள கிணறு ஒன்று தோன்றுகிறது. இக்கிணற்றினுள் வடமஞ்சள், நீலகோடுவேலி யென்னும் இரண்டு மூலிகைகள் இருக்கின்றன. இவ்விரண்டுக்கும் அபூர்வமான சக்தி யுண்டாம். எப்பேர்ப்பட்ட வியாதியையும் போக்கடிக்கும்படியான சக்தி வாய்ந்துளது வடமஞ்சளுக்கு; நீலகொடுவேலிக்கோ, எவ்வளவு கெட்டியான உலோகமானாலும் அதை திரவமாய்ச் செய்யும் தன்மையுண்டாம். இது இவ்வைரோப்பியருக்குத் தெரிந்ததன்மேல் தாம் அப்பச்சிலைகளைக் கொண்டுவருவதாய் நிச்சயித்துப் புறப்பட்டார். அக்கம்பக்கத்திலுள்ள கிரா-

மத்தவர் கிணற்றண்டை போவதனால் ஏற்படக்கூடிய கஷ்ட நிஷ்டூரங்களைச் செவ்வையாய் எடுத்துரைத்தார்கள். இம்மூலிகைகளைக் கொண்டுவருவதில் மிகுந்த பிரயாசையுண்டென்பது அவ்வைரோபிய பிரயாணிக்குத் தெரிந்திருந்தாலுங்கூட, எவ்விதத்திலும் கொண்டுவந்து தீர்வதென்றே மதித்துத் தம்முடன் கூட பலபேரை யழைத்துக்கொண்டு புறப்பட்டார். பலவிதமான வாத்தியங்களோடும் துப்பாக்கி, ஈட்டி, பாலா முதலான கருவிகளோடும் இவர்கள் சென்றார்கள். மலைமீதேறிச் சிகரத்தைவெட்டிக் கிணற்றை யணுகினார்களோ இல்லையோ அப்போதே இவர்கள் என்றென்றும் கண்டிராத பயங்கர முண்டாக்கக் கூடிய ஜந்துக்கள் அக்கிணற்றுக் குள்ளிருந்து கிளம்பின. பெருஞ்சத்த முண்டாக்கின. ஜலத்தில் ஒருவன் கைம்மாறு போட்டு நீந்தினால் எப்படிச் சத்தமுண்டாகுமோ அப்படியே இந்தக் கிணற்றினின்றும் சத்தங்கேட்டதாம். கிணற்றுள்ளேயே வெகுநாள் வாஸமாயிருக்கும் ஜந்துக்களின் 'புஸ் புஸ்' சத்தமும் 'கீச் மூச்' ஒலியும் கர்ணகடூரமாயிருந்தன. கிணற்றண்டை சென்றவர்கள் தம் துப்பாக்கிகளை பார்செய்து கிணற்றை நோக்கிச் சுட்டனர். அவ்விடம் முழுவதும் பெரும் புகையாயிருந்தது அதன் மத்தியில் இறகுகளோடு கூடின பறவைகள் பல அதற்குள்ளிருந்து பறந்து போயின. கொஞ்ச நேரத்திற்குப் பிறகுப் புகை சிறிது சமனமாயிற்று. பின் கிணறுபோன்ற சுனைக்குள் துஷ்ட ஜந்துக்கள் இராவென்று இவர்கள் நினைத்து ஒரு பெரிய இரும்புச் சங்கிலியின் முனையில் கிணற்றுள் மூழ்குவோன் ஒருவனை உட்காரவைத்துச் சரசரவென்று சுனைக்குள் விட்டார்கள். ஜலமோ மிக்க ஆழத்திலிருப்பதாக இவர்கள் சங்கிலி விடுவதனாலேதெரிந்ததாம். தண்ணீரண்டை சங்கிலியோடுகூட மூழ்குவோன் போய்ச்சேர்ந்ததும் அங்கு படர்ந்திருக்கும் பற்பல கொடிகளைக் கண்டு இவைகளில் வடமஞ்சளையும் நீலகோடுவேலியையும் பகுத்து எடுக்க முடியாமல் கையில் அகப்பட்டவற்றைக் கொண்டு செல்ல நினைத்து ஜலத்தில் மூழ்கிப் பாசிபோற் படர்ந்திருந்த கொடிகளை இருகைகளாலும் வாரியிறுகக் கட்டிக்கொண்டு மேலே வெளிக்கிளம்பினான். இதற்குள் இவன் மூழ்கியதையும் பின்னர்க் கொடிகளோடு தலைக் கிளப்பியதையும் கண்ட வெளியிலிருந்தார்க்கு தம் காரியம் பலித்ததென்ற பேராவல் உண்டாயிற்று. இத்தருணத்தில் தண்ணீருக்கு மேல் தலை கிளம்பியவன் தன் கைக்கொடிகளோடு இரும்புச் சங்கிலியைத் தொட்ட நிமிஷத்திலேயே அச்சங்கிலியானது, அவன் கையிலிருந்த நீலகொடுவேலியினது திரவமாக்கும் அற்புதச் சக்தியால் திரவமாகவே, கொடியைக் கொணர்ந்தவன் ஜலத்துள் விழுந்து மூழ்கினான்; ஐயோ பரிதாபம். கிராமத்தவரும் மற்றோரும் இவ்விரண்டு மூலிகைகளின் அபூர்வ சக்தியைக் குறிப்பிட்டுரைத்தபோது நம்பாமலிருந்தவர்கள், தம் கண் முன்பே நேர்ந்தவற்றைக் கண்டு இந்தியாவின் கண் எத்தனையோ மூலிகைகள் இருக்கின்றனவென்றும், அவ்வவற்றின் அதிசயத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமானால் அவ்வப்போது நேரக்கூடிய நஷ்டங்களுக்கும் அபாயங்களுக்கும் பின் வாங்கலாகாதென்றுஞ் சொல்லிக் கொண்டே திரும்பினர். 'பச்சிலை நிரம்பிய பசும பூமி' யென்று இந்தியாவைப் பல மகான்கள் வருணித்திருந்தாலும் இது பரியந்தம் இதனிடம் இவ்வளவு சக்திவாய்ந்த மூலிகைகள் இருப்பதாக இக்கலியில யாம் கேட்டதில்லை. இப்போதோ அவை இருப்பது நிதர்சனமாயிற்று. இனி இவற்றை எவ்விதத்தால் கொணர்ந்து மானிடர்க்கு உபயோகமாக்கலாமென்பதை அறிவாளிகள் கவனிப்பாராக.

"கமலநாதன்."

☞ இதில் ஒரு பெரிய இரகசியம் புதைந்து கிடக்கிறது இந்த அற்புதக் கேணிக்கு "மூலக் கேணி" யென்று சொல்லுவர் சித்தர்கள். வடமஞ்சள் எப்படிப்பட்ட குணத்தையும் ஆற்றி வைக்கும அற்புத கற்பமாகும்.—வி. சி. பர்.

EXTRACTS.

## WAGES IN THE PALACE.

### அரண்மனைச் சம்பளம்.

:(*):

"உத்தியோகம் புருஷ லக்ஷணம்" என்னும் நீதிக்கிணங்க ஜனங்கள் யாவரும் கல்வி கற்று கனபண்டிதராகிய பிறகு உத்தியோகம் செய்ய விரும்புவது யாவருள்ளும் இக்காலத்தில் சகஜமென் றேற்பட்டிருக்கிறது. முன் காலத்தில் இவ்வித எண்ணம் விசேஷமாய் பிரமதலமென்று சொல்லப்படும் பிராமண வகுப்பாருள் தான் தோன்றியிருந்தது. புத்தி நுட்பத்திலும் கலா ஞானங்களிலும் பிராமண வகுப்பாரே மேலானவர்கள் என்று இக்காலத்திலும் யாவர் மனதிலும் நன்கு பதிந்திருப்பதுபோல் முன் காலத்து அரசர்கள் மனதில் பதிந்திருந்தமையால் மந்திரி ஸ்தான முதல் மடப்புளி ஸ்தானம் வரையில் பிராமணர்களுக்கே கொடுக்கப்பட்டுவந்தது. இப்போது நமது காருண்ய பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாராலும் பிராமணர்கள் அபிமானிக்கப்பட்டு வருவது பிராமணர்கள் பிரபல உத்தியோகங்களை வகித்து வருவதினின்றும் வெளிபாகும். இருகண்களையும் ஒருங்கே பாராட்டவேண்டியது கவர்ன்மெண்டாருடைய முக்கிய கடமையா யிருக்கவேண்டியதாதலால், நம் பிரிடிஷ் கவர்ன்மெண்டார் பணக்காரர்கள் முதல் பரதேசிவரையில் யாவரும் படிக்கவேண்டுமென்றும் அவரவர்கள் கலா யோக்கியதைக் கேற்ப உத்தியோக முறைகள் கொடுக்கப்படுமென்றும் ஏற்படுத்தி யிருப்பது, சர்வ ஜன சம்மதமாகு மென்று நாம் கூறவும் வேண்டுமோ? ஜாதிவித்தியாசமின்றி, அதிக எளியோரா யிருப்பவர்களுக்கும், கல்வி கற்பதில் அபிரஷை யில்லாதவர்களுக்கும் கல்விகற்பதில் ஆசக்தி ஏற்படும்படி சம்பளங்களில்லாமல் படிப்பும், யோக்கியதைக்கு மிஞ்சிய உத்தியோகமும் ஏற்படுத்திக் கொடுப்பதும் சர்வஜன சம்மதமுமே யாகும். என்றாலும், பிந்திய வகையான 'யோக்கியதைக்கு மிஞ்சிய உத்தியோக மேற்படுத்திக்கொடுத்தல்' விஷயத்திற்கு ஆக்ஷேபணை எழுப்பாமலிருக்க முடியாதென்பதெமதபிப்பிராயம். நம் நாடு எவ்விதமிருந்தபோதிலும் ஐரோப்பாவில் எவ்வாறு இம்முறை யனுசரிக்கப்படுகிற தென்பதைக்கவனிப்போம். ஐரோப்பாவில் மதப் பிரிவினையாளர்க ளிருப்பினும், இந்தியாவிலிருப்பதுபோல் ஜாதிப் பிரிவினையாளர்கள் கிடையா, கொண்டு கொடுத்து சம்பந்தஞ் செய்து கொள்வதிலும், கடின நிபந்தனைகள் கிடையா. "மேதினியிலிட்டார் பெரியோர், இடாதா ரிழிகுலத்தோர்" என்னும் ஆன்றோர் வாக்குக்கிணங்க அங்கிருப்பது எளியோர், வலியோரென இருவகை யாளரே. அங்கு எளியோர் என்ன படித்திருப்பினும் வலியோர்(பணக்காரர்) வம்சத்திலுதித்தாற்ற யோக்கியதையும் ஏற்பட்டிருப்பின் அவர்களுக்கே பிரபல உத்தியோகங்கள் கொடுக்கப்படும் இது ஒருவாறு பொருந்தும். ஏனெனில் வம்சபரம்பரையாய் திரவியவந்தர்களா யிருப்பவர்களிடத்தில் அடக்கம், பொறுமை, இரக்கம் முதலிய உத்தம குணங்கள் பொலிந்து விளங்கும். எளியோரிடத்திலோ என்ன வித்தியா யோக்கியதை ஏற்பட்டிருப்பினும் சர்வம், டம்பம், அசூயை என்று சொல்லப்படும் துர்க்குணங்கள் செறிந்து அவர்களைப் பங்கப்படுத்தும். ஆனால் எல்லா எளியோரிடத்தும் இத் துர்க்குணங்களிருக்கு மென்பது எமதபிப்பிராயமல்ல. பெஞ்சமின் பிராங்களின், முத்துஸ்வாமி ஐயர் போன்ற எத்தனையோ மகான்கள் ஆரம்பத்தில் இருந்தவிடம் தெரியாமலிருந்து தமது உத்தம குணத்தால் இருளுலகத்தில் தமது ஜோதியைப் பிரகாசித்துக் கொண்டு காலையிலெழும்புங் கதிரவன்போற் கிளம்பி விளங்கினதையும் நாம் கண்ணாரக் கண்டுள்ளோம். எளியோர்கள் முக்கியமாய் வியாபாரம் செய்தும், கூலிவேலை செய்தும் பிழைக்கின்றனர். உத்தியோகம் பெற்றும் பிழைப்பதில் இருவகையுண்டு. ஒன்று கவர்ன்மெண்டு உத்தியோகம் பெற்று பிழைத்தல்; அதாவது இராஜ சேவகம் செய்து பிழைத்தல். இரண்டாவது வியாபாரத் துறைகளில் பிரவர்த்தித்து வேலை செய்யும் நண்பர்களுக்கு உதவி புரிந்து சேவகம் செய்தல். இதில் இராஜ சேவகம் செய்தலே கௌரவமுள்ள, மேன்மை பொருந்திய, தொழில். அதிலும் இறைவனரண்மனையிலேயே உத்தியோகம் பெறுதல் எத்தன்மையதாகுமென்பதை சற்று விவரிப்போம்.

தற்காலத்தில் இந்திய மன்னர்களது அரண்மனையில் சேவகம் செய்யும் சேவகர்கள் பிரிட்

டிஷ் இந்தியாவில் வேலை பார்க்கும் உத்தியோகஸ்தர்கள் சம்மானிக்கப்படுவது போல் சம்மானிக்கப்பட்டே வருகின்றனர். ஐரோப்பாவில் இராஜர் அரண்மனையில் வேலை பார்க்கும் உத்தியோகஸ்தர்களுக்கு விசேஷ கௌரவமும், சம்மானமு முண்டு. அவ்வித உத்தியோகஸ்தர்களிலும், உயர்தர உத்தியோகஸ்தர்களென்றும் கீழ்தர உத்தியோகஸ்தர்களென்றும் இரண்டுண்டு, உயர்தர உத்தியோகஸ்தர்களுக்கு வருஷத்துக்கு 4000 பவுன் முதல் 600 பவுன் வரையில் சம்பளம்கொடுக்கப்படும். கீழ்தர உத்தியோகஸ்தர்களுக்கு வருஷத்திற்கு 20 பவுன் முதல் 40 பவுன் வரையில் கொடுபடுகிறது. ஐரோப்பாவிலுள்ள எல்லா அரண்மனைகளிலும்விட ருஷிய சக்கரவர்த்தி அவர்களது அரண்மனையில் தான் உத்தியோகஸ்தர்களுக்கு அதிக சம்பளம் கொடுக்கப்படுகிறது. நம் சக்கிரவர்த்தி அவர்களது அரண்மனை பெரிய உத்தியோகஸ்தருக்கு வருஷமொன்றுக்கு 600 பவுன் தான் கொடுக்கப் படுவதாய்க் கேள்விப் படுகிறோம். ருஷியசக்ரவர்த்தி அரண்மனை பெரிய உத்தியோகஸ்தருக்கு வருஷத்திற்கு 1200 பவுன் கொடுக்கப்படுகிறது. ஜெர்மன் கெய்ஸர் அரண்மனையில் பெரிய உத்தியோகம் வகிக்கும் பிரபுவிற்கு வருஷத்துக்கு 600 பவுன் தான் கொடுக்கப்படுகிறது. எவ்விதச் சம்பளம் அவர்கள் பெறினும் விசேஷ தினங்களில் அதாவது அரண்மனையில் விருந்து நடந்த காலத்தும் கலியாண முதலியவைகள் நடந்த காலத்தும் விசேஷ வருமானங்கள் அவர்களுக்குக் கிடைக்கும். மேலும் ஐந்து வருஷ காலம் அரண்மனை உத்தியோகம் வகித்த ஒருவன் சாகும் காலபரியந்தம் உபகாரச் சம்பளம் பெற அருகனாகின்றான். இவரது சந்ததியார்கள் அத்தேசங்களிலேயே நல்ல உத்தியோகம் பெறாவிடினும் அயல் தேசங்களில் நல்ல உத்தியோகம் வகித்து விளங்கும்படியான பாக்கிய மேற்படும். தற்காலத்தில், நம் ஸ்ரீரங்கம் திருப்பதி முதலிய வைஷ்ணவ க்ஷேத்திரங்களில் கோயில் திருப்பணிகள் செய்து ஜீவிக்கும் பிராமண சேவகர்களுக்கு எவ்வளவு செலவுண்டோ அவ்வளவு செலவு+'ன் சீமையில் அரண்மனை உத்யோகஸ்தர்களுக் குண்டான செலவும். அரண்மனை உத்தியோகம் வகித்த சேவகர்களில் எத்தனையோ பேர் இப்போது அங்கு பெரிய ஜமீன்தார்களாய் விளங்குகின்றனர். அரண்மனையில் பெரிய உத்தியோகம் வகிப்பது இலேசான காரியமல்ல. அநேக பாஷா ஞானமுள்ளவர்களாயும் சமயோசிதம் போல் நடந்து கொள்ளக் கூடியவர்களாயு மிருக்க வேண்டும். இல்லாவிடில் அதிபரிதாபகர ஸ்திதிக்கு வரும்படி நேரிடும். நம் இராஜ ஸமஸ்தானங்களில் உத்தியோகங்கள் பாரம்பரியமாய்க் கொடுக்கப்பட்டு வருகிறது போலல்லாமல் அங்கு யோக்கியதா பக்ஷிமறிந்து கொடுக்கப் படுகிறது.

மா. வெ. வைத்திய நாதன்.

---

## Green Leaf Manure and Green Manuring.

## பச்சிலை எருவும் பசுந்தாள் பயிரும்.

(ராவ் பகதூர் ஜே. தர்மரங்க ராஜு காரு செய்த உபந்நியாசம்.)

—(*)—

கந்தகம்—இது உங்கள் எல்லாருக்கும் தெரிந்த வஸ்து. சாதாரண தீக்குச்சிகளை உராய்த்து உண்டாகும் ஓர்வித நாற்றம் இவ்வஸ்து. எரிவதால் உண்டாகின்றது. துத்தம், துருசு, அன்னபேதி போன்ற வஸ்துக்களெல்லாம் கந்தகத்தின் சேர்க்கைப் பொருட்கள்.

பாஸ்கரம்.—எலும்புகளைச் சுட்டால் அவற்றின் நிறையில் 2/3 சாம்பலாக நீறும். இந்த சாம்பலுக்கும் கட்டை யெரித்த சாம்பலுக்கும் மெத்த வித்யாசமுண்டு. எலும்பு நீறு பாஸ்கரமும் சுண்ணபஸ்பமும் சேர்ந்தாகியது. பாஸ்கரம் சுயம்பா யிருக்கும்போது இருட்டில் பிரகாசம் கொடுக்கும். அதனால் அதற்குப் பிரகாசிதம் என்றும் பெயர். இது இவ்வஸ்துவின் கலப்புப் பொருள்.

சுண்ணம்.—இது பிராண வாயுவுடன் கலந்து சுண்ண பஸ்பமாகும் கரியமில வாயுவுடன் கலந்து சுண்ணாம்புக் கல்லாகும்.

மகனீசியம்—இது சுண்ணாம்பு போன்ற ஒரு வஸ்து. பிராணவாயுவுடன் கலக்கும். இரவில் ஏதாவது ஒரு வஸ்துவைப் படம் பிடிக்கவேண்டுமானால் மகனீசியம் என்னும் வஸ்துவை எரித்தால் மிகவும் பிரகாசமான வெளிச்சம் உண்டாகும். அந்த வெளிச்சத்தில் படம் பிடிக்கக்கூடும்.

மாஉப்பு—இது பொட்டாசியம் என்னும் வஸ்துவும் பிராணவாயுவும் கலந்தது. இந்தப் பொருள் ஆகாய மண்டலத்திலுள்ள ஈரத்தை கிரஹித்துக் கொள்ளும் இயற்கையுள்ளது.

சோடா உப்பு —மா உப்புபோன்ற ஓர் வஸ்து. ஆனல் மா உப்பைப்போல் பயிர்களுக்கு அவ்வளவு உபயோகமுள்ள வஸ்துவல்ல

இரும்பு.—இரும்பு துருப்பிடித்தால் அயசிந்தூரமாகும். அயம் கந்தகத்துடனும் பிராணவாயுவுடனும் சம்பந்தப்பட்டு அன்னபேதி யென்னும் கலப்புப் பொருளாகின்றது.

மாங்கனீஸ்.—இது இரும்புபோன்ற வஸ்துவாய் மண்ணில் இருப்பதாயினும், இரும்புபோல் பயிர் வகைகளுக்கு உபயோகமுள்ளதல்ல.

ஸ்படிக மூலம்—இது பிராணவாயுவுடன் கலந்து சுத்தமான மணலாகின்றது. அனேகவித கற்களிலும் மண்ணிலும் மிகுதியாய் இவ்வஸ்து நிரம்பியிருக்கும்.

குளோரைன்.-(லவணமூலம்) இது ஜலவாயுவுடன் கலந்தால் லவணம் திராவகமாகும். லவணகாரத்துடன் இவ்வஸ்து கலந்தால் நாம் உண்ணும் கரியுப்பாகின்றது.

மண்ணிலுள்ள ரசாயன வஸ்துக்கள் எவ்வெவை என்பதைப் பற்றியும், அவற்றின் குணாகுணங்கள் கலப்புப் பொருட்கள் இவற்றைப்பற்றியும் நான் உங்களுக்குச் சுருக்கமாகச் சொன்னேன். இவற்றில் பயிர்களுக்கு விசேஷமாய் உபயோகப்படுவதும் அத்தியாவசியமானதும் எவையெனப் பின்னல் சொல்லுகிறேன். இப்போது இவ்வஸ்துக்களாலாகிய மண்ணின் குணபேதங்களுக்குத் தக்கபடி அவைகளை எத்தனை வகுப்புகளாகப் பிரிக்கலாம் என்பதைச் சற்று கவனிப்போம்.—

1. சரளை நிலம்—மிகவும் கற்கள் நிரம்பியுள்ளது.

2. மணல் நிலம்.—இதில் 100-க்கு 90-பாகம் மணலாகவே யிருக்கும்.

3. களிமண் நிலம்.—இதில் மூன்றில் இரண்டு பாகம் களிமண்ணாகவே யிருக்கும்.

4. பசளை மண்.—மணலும் களியும் சமமாகக் கலந்திருக்கும். இவைகளே மண்ணின் தன்மையைக் காட்டக்கூடிய முக்கிய பிரிவுகள். என்றாலும் நிறத்திலும் தன்மையிலுமுள்ள முக்கிய வேறுபாடுகளை உத்தேசித்து நிலத்தை:—

கரிசல்ஜலம், படுகைநிலம், செம்மண்நிலம், சுக்கான்நிலம், களர்நிலம், பருத்திக் கரிசல் நிலம், குருமண் நிலம் என்று பலவிதமாய்ப் பிரிக்கிறார்கள். இவற்றின் குணபேதங்களைப் பற்றிப் பேசுமுன் மண்ணில் சேர்ந்திருக்கும் கந்தமூலப் பொருளின் தன்மையைச் சற்று எடுத்துச் சொல்லுகிறேன். ஒரு நிலத்தை ஒரு அடி ஆழத்துக்குத் தோண்டினல் அதன் மேல் மண்ணுக்கும் அடிமண்ணுக்கும் நிறத்தில் அதிக வித்தியாசமிருக்கும். மேல் மண் கருப்பு நிறமுள்ளதா யிருக்கும். இந்தக் கருப்புநிறம் மேல் மண்ணில் கலந்திருக்கும் கந்தமூல பதார்த்தத்தினு லுண்டான தென்று திட்டமாய்ச் சொல்லலாம். பாரமற்ற மணற்கால் நிலங்களில் இந்தக் கந்தமூலப்பொருள் நூற்றுக்கு ஒரு பாகம்கூடக் கலந்திருக்காது. வளமுள்ள களிக்கால் நிலங்களிலோ இவ்வஸ்து 100-க்கு 15 பாகம் கலந்திருக்கும். கந்தமூல பதார்த்தமானது கரி மூலம், பிராணவாயு, ஜலவாயு, உப்புவாயு இவைகளால் உண்டான ஒரு கலப்புப் பொருள். நிலங்களுக்கு இந்தக் கந்தமூல பதார்த்தமானது அநேக விதங்களில் உபயோகமுள்ளதாயிருக்கிறது. நான் முன் சொன்னபடி உப்புவாயுவின் கலப்பு வஸ்துக்களில் அனேகம் இந்தப் பொருளுடன் மிகவும் அந்நியோந்ய சம்பந்தமுள்ளவைகளா யிருக்கின்றன. நிலத்தின் ஸ்தூல ஸ்திதியும், அதன் குணபேதங்களும் அனேகமாய் கந்தமூல வர்க்கப்பொருள்களின் கலப்பினலேயே எற்படுகின்றன. ஓர் நிலத்தின் வெப்பமும் குளிர்ச்சியும், அதன் உரமும் இளக்கமும், அதன் ஈரங்காக்கும் இயற்கையும் இவையெல்லாம் கந்தமூல வர்க்கப்பொருளின் சம்பந்த பேதத்தாலுண்டாகின்றன.

ஜீவனுள்ள சராசரப் பொருள்களெல்லாம் மாண்டு மடிந்து அழுகிக் கெடுவது உங்களுக்குத் தெரியும். இவ்வஸ்துக்கள் மடிந்து அழுகிக் கெடுவதற்குச் சில வகையான ஜீவ அணுக்கள் அவசியம். அவைகள் வேலை செய்யவில்லை யானல் பூதப்பொருள்களுக்கு அழிவு நேரிடாது. பருமனில் மிகவும் சிறியவைகளாயினும் அவைகள் கோடிக்கணக்காய்ப் பல்குவதால், அவற்றின் வேலையானது வெகு விரைவில் நடத்தப்படுகின்றது. பிரபஞ்சம் முழுவதும் இந்த ஜீவ அணுக்கள் நிரம்பியிருக்கின்றன. அவைகள் நமது கண்ணுக்குப் புலப்படாவாயினும் அவற்றின் பயனை நாம் தெளிவாய்ப் பார்க்கிறோம். திராக்ஷா ரசம் சாராயமாவதும், வாழைப்பழத்தின் ரசம் கடலைப் புளிப்பு ஆக மாறுவதும், பால் உறைவிடைத் தயிராவதும், மாம்பழம் அழுகிக் கெடுவதும், மாம்சம் அழுகி துர்நாற்ற முண்டாக்குவதும், ஜீவர்களுக்குக் காய்ச்சலுண்டாகி உடம்பு க்ஷீணமுண்டாவதும், எல்லாம் இச்சிற்றுயிர்களின் வேலையினல் தான்.

—கிருஷிகன்.

———:-:———